|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 சோபகிருது ௵ மார்கழி - தை ஜனவரி 2024

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின்
சார்பில் வெளியிடுவோர் :
**ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்**





# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மார்கழி - தை 2024

மலர் 13 ஜனவரி 2024 இதழ் 1

பொருளடக்கம்

ப்ரார்த்தனை 3
ஆசிரியர் பக்கம் 4
தெய்வத்தின் குரல் 7
பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
நீதிக் கதைகள் 9
பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
அனுக்கிரஹ பாஷணம் 14
பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் 15
தாயுமான சுவாமிகளும், அத்வைத நிலையும் 16
இடர்நீக்கும் திருமுறைகள் 22
தை மாத விசேஷ தினங்கள் 25
ராஜ தரங்கிணி 26
அத்வைத ஆசார்ய பரம்பரை 29
முகாம் நிகழ்ச்சிகள் 35
சாணக்ய ஸுபாஷிதம் 38
மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ 40
வேதாந்த ஸம்வத்ஸரம் 42
மகாபாரத சுருக்கம் 44
மூக ஸாரம் 47

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்



## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*இந்த பூமிக்குச் சாந்தி அன்தரிக்ஷத்துக்குச் சாந்தி மேலுலகத்திற்குச் சாந்தி திசைகளுக்கும் இடை திசைகளுக்கும் சாந்தி அக்னிக்குச் சாந்தி வாயுவிற்குச் சாந்தி ஆதித்யனுக்குச் சாந்தி நிலவுக்குச் சாந்தி, நக்ஷத்ரங்களுக்குச் சாந்தி, நீருக்குச் சாந்தி ஓஷதிகளுக்குச் சாந்தி, வனஸ்பதிகளுக்குச் சாந்தி பசுக்களுக்குச் சாந்தி ஆடுகளுக்குச் சாந்தி, குதிரைகளுக்குச் சாந்தி, புருஷனுக்குச் சாந்தி, ப்ரம்மத்திற்குச் சாந்தி, ப்ராம்மணனுக்குச் சாந்தி, சாந்திக்கே சாந்தி. அந்த சாந்தி எனக்கு இருக்கட்டும். அந்த சாந்தியினால் இருகால் ப்ராணிகளுக்கும் நாற்கால் ப்ராணிகளுக்கும் சாந்தியைச் செய்கிறேன் சாந்தி எனக்கு இருக்கட்டும்.*

*[யஜுர் வேதம் கோஷ சாந்தி]*

★★★★★★★★★★★★★★

*ராகம் திலங்* **சாந்தி நிலவ வேண்டும்** *தாளம் ஆதி*

**பல்லவி**

*சாந்தி நிலவ வேண்டும் ஆத்ம சக்தி ஓங்க வேண்டும் உலகிலே*

*[சாந்தி]*

**அனுபல்லவி**

*காந்தி மகாத்மா கட்டளை அதுவே கருணை ஒற்றுமை கதிரொளி பரவி [சாந்தி]*

**சரணம்**

கொடுமை செய்திடும் மனமது திருந்த நற்குணம் அதை புகட்டிடுவோம்
மடமை அச்சம் அறுப்போம் மக்களின் மாசிலா நல்லொழுக்கம் வளர்ப்போம்.
திடம் தரும் அஹிம்சா யோகி நம் தந்தை ஆத்மானந்தம் பெறவே
கடமை மறவோம் அவர் கடன் தீர்ப்போம் களங்கமில் அறம்
வளர்ப்போம் எங்கும் சாந்தி நிலவ வேண்டும்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பாடலாசிரியர். ஸேது மாதவ ராவ்
பாடியவர் .டி. கே. பட்டம்மாள்

# ஆசிரியர் பக்கம்

India's agriculture sector has been witnessing robust growth with an average annual growth rate of 4.6 percent over the last six years. Food grain production has risen from 285 million tonnes in 2017& 18 to 308 tonnes in 20-21.

*பாரத வேளாண்மை 2017-ல் 285 மில்லியன் டன்களாக இருந்து 2023-ல் 308 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. 4.6 சதவிகித வளர்ச்சியில் இன்று உள்ளது. [செய்தி] - மேலே தந்துள்ள விவரம் ஓர் மாதிரி தான். அச்சமூட்டும் கொரோனா காலத்திலும் நமது வேளாண்மை சிறந்து விளங்கியது. தெய்வ கடாக்ஷம் நம்மைக் காத்தது என்றால் மிகையாகாது. மற்ற நாடுகள் செய்வதறியாமல் திகைத்த போது நாம் வீறு கொண்டு வெற்றி கொண்டோம். மற்ற நாடுகளுக்கும் உதவி செய்தோம். கொரோனா தடுப்பூசிக்கு ப்ரசாரம் தேவையாயிருந்தது. வேளாண்மைக்கு அந்த தேவை கூட இருந்ததில்லை. இதற்குக் காரணம் நம் உழவர்கள் தான். ஓசைப்படாமல் மிகப்பெரிய சாதனையைச் செய்துள்ளனர். மத்திய அரசாங்கமும் அவர்களுக்கு உரிய பாராட்டை செய்துள்ளது. செய்தும் வருகிறது. வேதம் கூறுகிறது.*

*தேவர்களின் நல்லாசியை நாடும் உழவர்கள் கலப்பைகளை நுகத்தடியில் பூட்டிப் பூமியின் மடியிலே உழுதபின் அங்கே வீர்யமுள்ள விதை நெல்லை விதைக்கிறார்கள். கூரிய முனை உடைய அறிவாளின் முனையில் பல்லாயிரம் நெற்கதிர்கள் பிரிந்து வரட்டும் அதன் பயனாக பசுக்களும் ஆடுகளும் ரத வாகனங்களும் புஷ்டியான பெண்களும் கிடைத்து அனைவரும் மகிழட்டும். நதிகள் பெருக, பயிர்கள் செழிக்க, அழியாத ஊற்றுக்கள் போல் எமக்கு வளம் சேர்க்கட்டும். ப்ரஜாபதியே குறையாத செல்வத்தை அளித்து அருள்வாயாக'' ஆண்டாள் திருப்பாவையில் :*

*‘தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
*பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப*
*தேங்காதே புக்கிருந்து சீர்த்தத முலை பற்றி*
*வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் தரும் பசுக்கள்*
*நீங்காகத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்’*

*கூறுவது வேத கோஷத்தின் மொழி பெயர்ப்பு போல் உள்ளது.*

*வள்ளுவர் வாக்கான :*

*‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்பது எத்தனை உண்மை! ஆஸேது ஹிமாசலம் இந்த தை மாதத்தில் மகர சங்கராந்தி என்று பெரிய அளவில் கொண்டாடப்படுகிறது. நமது தற்போதைய உழவு [வேளாண்மை] செழிப்புக்குக்குக் காரணம் நமது பாரதீய உழவர்களே. அவர்களது இன்னல்கள் தீரவும் அவர்கள் வாழ்வு மேன்மையுறவும் இந்தத் தைத் திருநாளில் கடவுளைப் ப்ரார்த்திப்போம். ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம்’ என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜய ! ஜய ! சங்கர ! ஹர ! ஹர! சங்கர !*

ஜய ஜய சங்கர | உ | ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## தர்ம சக்கரம் பகவானின் அருட்சூசகம்



நமது பாரத நாடு விடுதலை அடைந்திருக்கும் இத்தருணத்தில், இந்தப் புராதன நாட்டு மக்கள் யாவரும் ஒரே மனத்துடன் ஸ்ரீ பகவானை மனமுருகிப் துதிக்க வேண்டும். நமக்கு மேன்மேலும் மனோபலத்தையும் தொன்று தொட்டு நமது நாட்டின் தனிச் சிறப்பாக உலக முழுவதிலும் பெருமை பெற்றுத் தந்துள்ள ஆன்மிகத் துறையில் நாம் நன்கு ஈடுபடச் சக்தியையும் கொடுத்தருளுமாறு வேண்டுவோம். அவரது அருளால் தான் நமக்குக் கிடைத்திருக்கும் இச்சுதந்திரத்தை நாம் உண்மையான சுதந்திரமாகக் காப்பாற்றிக் கொள்ளவும், அதன் வழியே நமது நாட்டினர் மட்டுமல்லாது, உலகின் கண்ணுள்ள எல்லா மக்களும் நிறைவாழ்வு என்பதன் நிரந்தரமான ஆனந்தத்தைப் பெற உதவி செய்யவும் முடியும்.

பாக்கியவசமாக நமது சுதந்திர பாரதத்தின் கொடிக்கு நடுவில் நடுநாயகமாக பகவானது தர்மஸ்வரூபமான சக்கரம் இடம் பெற்றிருக்கிறது. இக்கொடியின் அமைப்பைத் திட்டமிட்ட தலைவர்களின் கருத்து வேறுவிதமாக இருப்பதாகத் தோன்றினாலும்ட, நாமோ, 'பகவானே இந்நாட்டின் உயிர்நிலை அவரைச் சுற்றியே பிரஜைகளின் வாழ்க்கை முழுதும் படர்ந்திருப்பதுதான்' என்பதை நமக்கு நினைவூட்டவும், அவரது காப்பு சுதந்திர பாரதத்திற்கு எப்போதும் உண்டு என்று காட்டு முகமாகவுந்தான் அவரது இத் தர்ம சக்கரம் நமது கொடி நடுவில் இடம் பெறக் கருணை கூர்ந்திருக்கின்றாரென எண்ணுகிறோம்.

### உண்மையான 'ஸெக்யூலரிஸம்'

சுதந்திர பாரத அரசாங்கமானது மத விஷயமாகப் பின்பற்ற வேண்டிய கொள்கை 'ஸெக்யூலரிஸம்' என்பதாக இருக்க வேண்டும் என்பதே தற்போது அரசியலாரின்

கருத்தாக உள்ளது. இந்த ‘ஸெக்யூலரிஸம்’ என்பது அரசாங்கம் எந்த மதத்தையும் சார்ந்ததாக இல்லாதிருப்பதே என்று அவர்களால் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது.

இது சரியான கருத்தல்ல என எடுத்துக்காட்டி, ‘ஸெக்யூலரிஸம்’ என்பது உண்மையில் யாது என்று தெரிவிக்க வேண்டியுள்ளது. தற்போது எண்ணுவது போல் அது அரசாங்கம் எந்த மதத்தையும் சார்ந்து, அதாவது மதத் தொடர்பே அற்று இருப்பதல்ல. மாறாக அது, அரசாங்கமானது எந்த ஒரு மதத்தையும் மட்டும் சாராது, எல்லா மதங்களையும் ஆதரிப்பதாக இருப்பதே என்பதுதான் சரியான பொருள்.

ஒரு நாட்டின் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தை மட்டுமே சார்ந்து பிற மதங்களை இழிவும் அழிவும் செய்யாது, எல்லா மதங்களையும் ஏற்ற இறக்கமின்றி சம பாவத்துடன் ஆதரித்து, அவை யாவும் பரஸ்பரப் பகையின்றித் தழைத்தோங்க உதவி செய்ய வேண்டும் என்ற உயர்ந்த கொள்கையே உண்மையான ‘ ஸெக்யூலரிஸம்’ ஆகும்.

மக்களின் உள்ள உயர்வில் அரசின் பொறுப்பு

பிரஜைகளின் உடல் நலத்திற்கும், உலகியல் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் வழிவகைகள் காண்பதான விவசாயம், பொருளாதாரம், உலகியலை மையப்படுத்திய கல்வி, சுகாதாரம், உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது ஓர் அரசாங்கத்தின் முக்கியமான பொறுப்பு என்பது உண்மையாயினும், அதோடு பொறுப்பு முற்றிலும் முடிந்து விட்டதாகக் கருதுவதற்கில்லை. உடலைவிட முக்கியம் உள்ளமேயன்றோ? பிரஜைகளின் அந்த உள்ளமாம் உயிரை அபிவிருத்தி செய்வதை ஓர் அரசாங்கம் புறக்கணிக்க முடியுமா? உள்ளவுயர்வு பெறாத மக்கட்கூட்டம் வாழும் நாடு நாடாகுமா? ‘உயர்ந்தோர் மாட்டே உலகு’ என்பதன்றோ ஆன்றோர் - சான்றோர் அறிவுரை? எனவே, ஒரு நாட்டின் பரிபாலனத்திற்குப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம், நாடு நாடாக இருக்கவேண்டுமாயின், மக்களின் உள்ளத்தை உயர்த்தவும் நிச்சயமாக உதவி புரியத்தான் வேண்டும்.

இந்த உள்ள உயர்வை அளிப்பது மதமாகவே இருப்பதால், அதன் அபிவிருத்தியில் அரசாங்கத்திற்குப் பங்கு இருக்கிறது என்பதும் நிச்சயம்.

உலகியலில் செய்யும் எந்த அபிவிருத்தியும் நிலைத்து நிற்பதான பயனும், பயனால் விளைவதான ஆனந்தமும் தரவில்லையென்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்த அபிவிருத்தி தாற்காலிகமாகவே முடிவதாகவும், அதனைப் பெற மீண்டும் மீண்டும் போராடுவதாகவும், அப்போராட்டத்தில் பலவிதமான வர்க்கபேதப் போட்டி

பொறாமைகளும் சண்டைகளும் எழுவதாகவும் – மொத்தத்தில் அமைதி குலைவதாகவே காண்கிறோம். இன்றைய கண்டுபிடிப்புகளால் உலகியல் சுக சாதனங்கள் கணக்கின்றிப் பெருகிக் கொண்டே போவதில், எத்தனை பெற்றாலும் திருப்தி பெறாமல் மேன்மேலும் அதே தேடுதலில் ஓடி, சாந்த வாழ்வு என்னவென்றே அறியாதவர்களாக இருக்கிறோம். 'சுவரை வைத்தே சித்திரம்' என்றபடி உடல் நலனை ஓம்பத்தான் வேண்டுமாயினும், 'சித்திரம் தீட்டவே இச்சுவர், உள்ளத்தின் உயர்வான உயிரின் நிறைவே அச்சித்திரம்' என்பதையும் நாம் மறவாது பொன்னேபோல் மனத்தில் பொதிந்து கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் நலிவும் அழுக்கும் உறும் உலகியல் சுவரைக் கெட்டிப்படுத்துவதும் அழகுபடுத்துவதுமான ஓயா முயற்சியிலேயே ஈடுபட்டு, அதோடு சேர்ந்துவரும் போட்டி பொறாமைப் போராட்டத்தில் அமைதியிழந்து, மேன்மேலும் தேவை தேவையெனும் குறைவாழ்வில் வாழ்நாளை வீணாக்குவதோடு முடிந்து விட்டோமாயின், நாம் ஆறறிவு பெற்றும் அறியாதாராகவே முடிந்த பரிதாபமாகத்தான் ஆகும். குறைவாழ்வை நிறைவாழ்வாகவும், போராட்டப் பொறாமையை அன்பு வழியில் நின்று பெரும் அமைதியாகவும், வந்து வந்து மறையும் தாற்காலிக இன்பத்தை நிரந்தர ஆனந்தமாகவும் மாற்றும் உள்ளத்தின் உயர்வு என்ற சித்திரத்தைச் சுவரின் மீது தீட்டிக் கொள்வதற்கு உபாயம் காண்பதே நாம் செய்ய வேண்டுவது.

உள்ளவுயர்வை நல்கவல்ல அந்த உபாயம் நல்லொழுக்கமாம் தர்மமும், தெய்வ பக்தியும், ஆத்ம சிந்தனையும் திரிவேணியாகக் கலக்கும் மதவியலேயாகும்.

வலிவூட்டும் மூன்று மூலிகைச் சாறுகளின் கலவையான 'திரிபலா' என்றும் இம்மூன்று அங்கம் கொண்ட மதவியலைக் கூறலாம். அழியும் மூலிகைச் சாற்றினால் சித்திரம் தீட்டுவது போலின்றி, இந்த அழியாத சஞ்சீவினி மூலிகையால் மதவியல் சித்திரத்தை நாம் உலகியல் சுவரின் மீது தீட்டிக் கொண்டால், பிறவிப்பயன் பெற்று அமரமான பூரணவாழ்வின் பேரானந்தத்தைப் பெறுவோம்.

சுவரை நல்ல முறையில் கட்டித் தருவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசாங்கத்திற்கு, அது காரணமாகவே, அச்சுவரான உலகியல் முன்னேற்றத்திலேயே நமது முழுக் கவனத்தையும் ஈடுபடுத்துவதான திட்டங்களை வகுத்து நம்முடைய வாழ்வின் நிறைவுக்கு ஊறு செய்யாமல், சுவரில் நம் கவனம் எந்த அத்தியாவசிய வரம்போடு நிற்க வேண்டுமோ, அந்த அளவுக்கே தானும் கட்டுப்பட்டு, நம்மையும் கட்டுப்படுத்திச் சுவரின் உத்தேசப் பயனான சித்திரமாகிய உள்ளத்தின் முன்னேற்றத்தில் நம் கவனத்தைத் திருப்பிவிடுவதில் நிச்சயமாகப் பங்கு உண்டு.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மதமாற்றம் பற்றிய விழிப்புணர்வு

**'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
**'தாயும் நீயே தந்தையும் நீயே...'**

என்பது தேவாரம்.

**'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'**

நாம் எல்லோரும் இறைவனது பிள்ளைகள்.

அதனால் தான் நாம் எல்லோரும் சகோதர சகோதரிகளாக இருக்கிறோம். அதுதான் நாம் ஆண்டவனின் பிள்ளைகள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

அன்பான சகோதர, சகோதரிகளே! என்று அழைக்க வேண்டும். நம்முடைய நாடு சுதந்திரம் பெற்று 55 ஆண்டுகள் ஆகின்றது. அப்போது பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டார்கள், பிரெஞ்சுக்காரர்களும் ஆண்டார்கள்.

அப்போது நம் நாட்டில் இருந்த விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் எடுத்துச் சென்றார்கள். அங்கிருந்து பலவிதமான பொருட்களை நமக்குக் கொடுத்து, கோடானுகோடி மதிப்புள்ள நம்முடைய சொத்துக்களை எல்லாம் எடுத்துச் சென்றார்கள்.



அதனால்தான் அந்தக் காலத்தில் தேசப் பற்றுள்ள பெரியவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நம்முடைய நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு ஒரு மாபெரும் தேசிய இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

மகாத்மா காந்தியின் வழியில் அஹிம்சா வழியில் போராடினார்கள். மகாத்மா காந்தி அவர்களே வழிநடத்தி, நமக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்.

அவர் சுதந்திரம் வாங்கிய போது இளைஞர்களுக்கு ஒரு முக்கியமான லட்சியத்தைச் சொன்னார். அவர் முதலில் ஒரு பத்திரிகையை துவங்கிப் பாடுபட்டார். அனைவரும் ஒற்றுமையாக இருப்பதற்காக, 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற பாடலையும் பாடினார்.

சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து நம்முடைய கைத் தொழிலை வளர்த்தார். வெள்ளைக்காரர்கள் நம் நாட்டை ஆண்டார்கள். பிறகு போய்விட்டார்கள். ஆனால் அவர்கள் ஆளும்போது நம் சமயத்தினரை கிறிஸ்தவர்களாக மதம் மாற்றினார்கள்.

அப்படி மதம் மாறிய கிறிஸ்தவர்களாகட்டும், முஸ்லிம்களாகட்டும் யாருமே வெளிநாட்டுக்குப் போக முடியாது. இங்குதான் இருக்க முடியும். அதனால் அவர்கள் இந்தியர்கள் தான்.

நம் நாட்டினர் முழுவதையும் மதம் மாற்றம் செய்துவிட வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் முயற்சி எடுத்தார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு டெல்லியிலே இந்த மத மாற்றத்திற்குத் தடைச் சட்டம் கொண்டு வருவதைப் பற்றிப் பேசினார்கள். இப்போது சமுத்திரம் பொங்கி வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். சமுத்திரம் பொங்காது. அது எவ்வளவு அலை வந்தாலும் அமைதியாகவே இருக்கும்.

அதனால் யாரும் பயப்பட வேண்டாம். பொதுவான ஒரு அரசாங்கம், பொதுமக்களுக்காக ஏற்படுத்திய சட்டம் இன்றைக்கு அமலுக்கு வந்து இருக்கிறது.

அதுதான் விசேஷம்.

இந்த சட்டம் எந்த வகையிலும் எந்த மதத்தினருக்கும் எந்தக் கட்சியினருக்கும் விரோதமனது அல்ல. எந்த ஜாதிக்கும் விரோதமானது அல்ல.

யார் எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும் சரி, எந்த மதத்திற்குப் போவதாக இருந்தாலும் சரி, சொல்லிவிட்டுச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். மதம் மாறினால்கூட சொல்லிவிட்டுச் செல்லுங்கள் என்கிறார்கள்.

இப்போதெல்லாம் கல்யாணம் எந்த முறைப்படி நடந்தாலும், பெரியோர்களால் நடந்தாலும் அதை ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாகி இருக்கிறது.

அதுபோல மதம் மாறிக் கொள்ளுங்கள். ஆனால் அதை ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். அவ்வளவு தான். அப்போதுதான் நாட்டின் மீது ஒரு பிடிப்பு ஏற்படும். நம்பிக்கை ஏற்படும். நம்முடைய சட்டங்களும் யாருக்கும் இடைஞ்சலாக இல்லை.

'எங்காவது யாரையாவது கட்டாயப்படுத்தியோ, மிரட்டியோ, பணம் கொடுத்தோ, மதம் மாற வைத்தால்– அப்படி மாறினால் அதைப் புகார் கொடுத்து விசாரணை செய்தால், அப்படி மாற்றியவர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்குத் தண்டனை உண்டு.

அவ்வளவு சுதந்திரங்களைக் கொடுத்திருக்கிறது நம்முடைய சட்டம். அதைப் புரிந்து கொள்ளாதவர்களும், அரசாங்கத்திற்கு எதிர்ப்புக் காட்ட வேண்டும் என்பவர்களும், அரசியலாக்க வேண்டும் என்று நினைப்பவர்களும், ஆளுங்கட்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பவர்களும்தான் அப்படிப் பண்ணுகிறார்களே தவிர, வேறு எந்தவொருக் காரணமுமல்ல.

53 வருடங்களாக இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம். ஒரு வருடமாவது இந்த மத மாற்றுத் தடைச் சட்டத்தைப் பற்றி சிந்தித்தோமா...? செயலுக்குக் கொண்டு வந்தோமா...?

இதை மக்களுக்கு நினைவு படுத்துவதற்காகவே சொல்கிறேன்.

அவர்களும் நாங்கள் மத மாற்றம் செய்யவில்லை என்று கூறுகிறார்கள். அப்படியே இருந்தால் சரி, சட்டம் சட்டசபையிலே இருக்கட்டும். அதற்கு வேலையே இருக்காது.

நீங்கள் யாரையாவது மதம் மாற்றப் புறப்பட்டால் அப்போது சட்டம் உங்கள்மீது பாயும். நீங்கள் சட்டத்தை மதித்து நடந்து கொண்டால் அது உங்கள் மீது பாயாது. ஆனால் சட்டம் உங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கும்.

அது தொடர்ந்து சட்டசபையிலேயே இருக்க வேண்டும் என்றால் நீங்கள் பேப்பரில் அறிக்கை கொடுப்பதோடு நின்றுவிடாமல்- நாங்கள் 'மனப் பூர்வமாக வருபவர்களை மட்டுமே மதம் மாற்றுகிறோம்' என்று இருந்து கொள்ளுங்கள்.

மனப்பூர்வமானவர்கள் என்றால் என்ன? ஐக்கியமானவர்கள். அப்படியென்றால் ஐக்கியமானவர்கள் மாற்றப்பட வேண்டியவர்களே இல்லையே!

ஒருவரை கேட்காதே என்றால் கேட்காமல் இருக்கலாம். ஒருவரை பார்க்காதே என்றால் பார்க்காமல் இருக்கலாம். ஒருவரைப் பேசாதே என்றால் பேசாமல் இருக்க முடியும்.

ஆனால், 'நினையாதே' என்றால் நினையாமல் இருக்க முடியுமா? அதை எப்படித் தடுக்க முடியும்?

ஒருவன் மனப்பூர்வமாக ஒரு மதத்தை விட்டு இன்னொரு மதத்திற்குப் போய்விட்டால் அவனை ஒன்றும் செய்ய முடியாது.

'நினை' என்றால் நினைக்க வைக்கலாம். 'மற' என்றால் மறந்துவிட முடியாது. மனம் ஊன்றிப் போய் விட்டால், அதைத் தடுக்கவே முடியாது. சட்டமே ஒன்றும் செய்ய முடியாது. பிறகு சட்டமே நிற்காது.

எனவே இந்தச் சட்டம் யாரையுமே எதிர்க்க வரவில்லை. எங்கே புகார் வருகிறதோ அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுப்பதற்குத்தான் வந்துள்ளது.

இது ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சிகளின் பின்னணியில் நடக்கக்கூடிய பிரச்சாரமே தவிர வேறு ஒன்றுமில்லை.

அதிலும் எந்தெந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதிலும் தத்தமது மதத்தை ஒழுங்காகக் கடைப்பிடித்துக் கொண்டு வாழ்க்கை நடத்தினால், அவர்களைப் பார்த்து மற்றவர்களும் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ள வாய்ப்பு உண்டு.

பிரச்சாரம் என்பது ஒரு கருவி. ஆனால் பிரச்சாரமே எல்லாவற்றையும் செய்து விடாது. வாழ்க்கை முறையில்தான் எதுவுமே நடக்கும்.

ஆகவே மதமாற்றச் சட்டம் என்பது அனைத்து மதத்திற்கும் பொதுவாக ஒரு நல்லதற்காகக் கொண்டு வரப் பட்டது.

பள்ளியில் படிக்கிறார்கள். பிறகு கல்லூரியில் படிக்கிறார்கள். படித்து விட்டு வெளியே வந்து வேலை வாய்ப்புத் தேடுகிறார்கள். அப்போது ஷெட்யூல்டு/ ஷெட்யூல்டு டிரைப் பிரிவுகளுக்குத்தான் வேலை வாய்ப்பு அதிகமாக வழங்கப்படுகிறது.

பெரிய படிப்புப் படித்தால்கூட மாற்று மதத்தினருக்கு சீட்டுக் கிடைக்காது என்று ஆக்கிவிட்டனர். கல்லூரிகளில்கூட தெரிந்தவர்களுக்குத்தான் 'சீட்' கொடுக்கிறார்கள். திரும்பத் திரும்ப அவர்களே வந்து கொண்டிருந்தார்கள். ஆனால் இனிமேல் அப்படி வர முடியாது.

பிரச்சாரம் செய்து மதம் மாற்றுவது எல்லாம் இனி நடக்காது. வேறு எதுவும் கெடுதல் பண்ணுவதற்காக வந்தது அல்ல இச்சட்டம். குறிப்பாக, தலித் பிரிவு மக்களை மதம் மாற்ற வருகிறார்கள் என்று புகார் வந்தால், 'தனித் தண்டனை' தரவேண்டும் என்று சட்டம் வந்திருக்கிறது!

இன்று தீபாவளித் திருநாளாக இருக்கிறது. தலித், மற்றும் அரிஜன மக்களுக்கு இருந்த பிரச்சினைகள் எல்லாம் நீங்கி வளம் பெற வேண்டும். நம்முடைய சமயக் கொள்கை மாறாமல், வழிபாட்டு முறைகளும் நீங்காமல் இருக்க வேண்டும். சமுதாய உணர்வோடு வாழ்வை நடத்தினால் நம் இந்து சமய மக்கள் மேன்மை பெறுவார்கள்.

எல்லாச் சாமிகளும், எல்லா மதங்களும் ஒன்று தான். வழிபாட்டு முறைதான் வேறுவேறு. நாம் எப்படிக் கும்பிட்டாலும் அவன் நம்மிடம் வந்து அருள்பாலிப்பான்.

சூரியனை கும்பிட்டாலும் வருவார். ஸ்தோத்திரம் சொன்னாலும் வருவார்.

நாம் நம்முடைய குறைபாடுகளை இறைவனிடம் முறையிட்டு அவரால் தீர்க்கப்பட்டு சந்தோஷமாக வாழ்வோம்.

நல்ல மழை பொழிய வேண்டும். நாம் வேண்டினால் கட்டாயம் மழை வரும். நாம் நம்முடைய சாமிகளைக் கும்பிட வேண்டும்.

நம்முடைய சமுதாயத்திலே எல்லாப் பிரிவினரும் ஒற்றுமையாக இருந்து வாழ வேண்டும்.

*'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியேன் பராபரமே'* என்ற தாயுமானவர் கூற்றுப்படி நாம் ஒற்றுமையோடு வாழவேண்டும் என்று கேட்டுக் கொண்டு தீபாவளித் திருநாளில் ஆசிகூறி விடைபெறுகிறேன். வாழ்த்துக்கள்.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா...
வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா...
வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா...

## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.


வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> phone : 24740549

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸ்ரீ சம்பத் கோவில் விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் சமயம் பெரியவா அவர்கள் ஆற்றிய உரையின் வடிவாக்கம்.



ஹைதராபாத் பாக்யா நகரில் இருந்து வந்தார்கள். தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளார்கள். நன்றாகப் படித்த அநேக மக்கள் வந்துள்ளார்கள். பாக்யா நகரில் மலை மேல் ஸ்கந்தகிரியில் சுப்ரமணிய ஸ்வாமி கோவில் உள்ளது. ஸ்ரீஸ்ரீஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் விக்னேஸ்வரர் கோவிலுடன் ஆரம்பித்து, அது பெரிது பெரிதாக ஆகி, இன்று பாக்ய நகரில் பிரசித்தி பெற்ற கோவிலாக உள்ளது. காஞ்சி காமாக்ஷி, ஏகாம்பரேஸ்வர், துர்கா தேவி, சங்கராச்சாரியார், நவக்ரஹ தேவதைகள், நடராஜ ஸ்வாமி மற்றும் அநேக கல்யாண உற்சவம், ஹோமங்கள் நன்றாகச் செய்கிறார்கள் ஸ்கந்தகிரி கோவிலில். பரமேஸ்வர குருக்கள் என்பவர் இருந்தார். இவர்கள் வந்து ஐம்பது வருடங்கள் ஆகிவிட்டன.

ஸ்கந்தகிரி கும்பாபிஷேகத்திற்காக வந்தோம். காஞ்சியிலிருந்து, கர்நாடக சென்று, கர்நாடகாவிலிருந்து ஸ்கந்தகிரி - அக்கோவிலில் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் ஏற்பாடு செய்து அனைத்தையும் புதுப்பித்தார்கள் - விக்னேஷ்வர், சுப்பிரமணிய ஸ்வாமி, துர்கா தேவி, சிவாலயம் கோவில்- கோபுரம் கூட புதுப்பித்தார்கள். சில்ப சாஸ்திரத்தில் புருஷ விமானம், ஸ்த்ரீ விமானம் என்று கூறுவார்கள். புருஷ விமானம் பற்றி சிறப்பாகக் கூறுகிறார்கள். காஞ்சியில் கௌசிகேஸ்வரர் கோவில் காமாக்ஷி கோவில் அருகில் உள்ளது. அது பல நூற்றாண்டு பழைய கோவில். அது முழுவதும் ராஜ கோபுரம், கீழே கர்பகிரகம், கோபுரம் அனைத்தும் சிலா ரூபத்தில் உள்ளது. ராஜஸ்தானிலிருந்து கற்கள் எடுத்துக் கொண்டு வந்து, துர்கா தேவிக்கு கோவில் கட்டினார்கள்.

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

*ராகம் கல்யாணி பஜ ரே கோபாலம் ஹே மானஸ தாளம் ஆதி*

**भज रे गोपालम् मानस भज रे गोपालम्**

**भज रे गोपालम् भजित कुचेलम् त्रिजगन्मूलमब दितिसुतकालम् (बज)**
**आगम सारम् योग विचारम् भोगशरीरमब भुवनाधारम् (भज)**
**कदनक्टोरम् कलुषविदूरम् मदन कुमारम् मधुसम्हारम् (भज)**
**नतमन्दारम् नन्दकिशोरम् हतचाणूरम् हम्सविहारम् (भज)**

**பஜ ரே கோபாலம் பஜித குஸேலம் த்ரிஜகன் மூலம் திதிஸுக காலம் (பஜ)**
**ஆகம ஸாரம் யோகவிசாரம் போக ஸரீரம் புவனாதாரம் (பஜ)**
**கதன கடோரம் கலுஷ விதூரம் ஸதன குமாரம் மது ஸம்ஹாரம் (பஜ)**
**நத மந்தாரம் நந்தகிசோரம் ஹத சாணூரம் ஹம்ஸ விஹாரம் (பஜ)**

*ஹே மனமே கோபாலனை வழிபடுவாய். குசேலனனால் வழிபட்டவனும், முவ்வுலத்திற்குக் மூலமானவனும், திதியின் புத்ரர்களுக்கு எமனுமான கோபாலனை மனமே வழிபடுவாய். ஆகமத்தின் சாரமானவனும்,யோகத்தால் விசாரிக்கப்படுபவனும், போகத்திற்காக ஆனந்த சரீரத்தை எடுத்தவனும், உலகங்களைத் தாங்குபவனுமான கோபாலனை மனமே வழிபடுவாய். பாபங்களைக் கடிந்து போக்குவோனும், மனக்கலக்கத்தை நீக்குவோனும் மதனனை குமாரனாகக் கொண்டவனும் மது என்னும் அரக்கனை அழித்தவனுமான கோபாலனை மனமே வழிபடுவாய். வணங்குபவருக்கு மந்தாரம் என்னும் கலபக மரம் போன்றவனும், நந்த கோபனுக்கு குழந்தையானவனும், சாணூரன் என்னும் அரக்கனை அழித்தவனும், பரமஹம்ஸர்களோடு விளையாடுபவனுமான கோபாலனை மனமே வழிபடுவாய்.*

# தாயுமான சுவாமிகளும், அத்வைத நிலையும்

**(கஜாரணியத் திராவிட கவிமணி வே. முத்துஸ்வாமி ஐயர், )**

சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்

தமிழ்நாட்டில் எல்லா ஜனங்களும் அறிந்த மிகப் பிரசித்தியுற்ற மகான்களில் தாயுமானவர் ஒருவர். இவர் சுமார் 300 வருஷங்களுக்குமுன் திரிச்சிராப்பள்ளியில் நாயக்கர் வம்சத்தார் ஆட்சியில், திருமலைநாயக்கர் பௌத்திரர் சொக்கநாத நாயக்கர் காலத்தில் பிறந்து வளர்ந்தவர். இவர் தந்தையார் வேதாரணியத்திலிருந்தவர்; திருச்சிராப்பள்ளி சமஸ்தானத்தில் ஒரு பெரிய கணக்கு உத்யோகம் பெற்று, அங்கே குடியேறினார். தமது தமையனார்க்குப் புத்திரப்பேறு இல்லாமையால், தமக்கு அப்போதிருந்த ஒரே குழந்தையை அவருக்குக் கொடுத்துவிட்டுத் திரிசிரபுரம் வந்தனர்.

திரிசிரபுரத்தில் தாயுமானார் திருவருளாற் பிறந்த குழந்தைக்கு, அந்தப் பெயரே இட்டு வளர்க்க, இளந்தாயுமானார் வளர்பிறைபோல், அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர்ந்தார். இவரது இளம்பிராயத்திலே தந்தையார் காலமாக, அரண்மனையில் தந்தையார் பார்த்த உயர்ந்த வேலையை, இவர் வயதிற் சிறியராயினும் அறிவு குணம் இவற்றால் பெரியராதலால் இவரே பார்க்க சேர்ந்தது. கண்ணுங் கருத்துமாக இவர் அந்தக் கணக்கு வேலையைக் கவனித்து வந்தாரெனினும், முன்செய்த நல்வினையின் பயனாக இவருக்கு மனம் ஞானமார்க்கத்திலே சென்றது. அச்சமயம், அங்குத் திருமூலர் மரபில் வந்த மௌன சுவாமிகள் என்ற ஒரு பெரியவர் ஸ்தல யாத்திரையாக எழுந்தருள, அவரை நம் தாயுமானார் அண்டித் தமக்குள்ள ஐயங்களை நீக்கிக்கொண்டு வந்தார்.

இப்படியிருக்கையில், சமஸ்தானாதிபதி காலமாக, அரசு அவன் தேவியின் வசப்பட்டது. இந்த அரசியார் தாயுமானாரது திருமேனியழகில் ஈடுபட்டுத் தகாத வார்த்தைகள் கூற, சுவாமிகள் அப்போதே அரசாங்க உத்தியோகத்தைத் துறந்து, உலகையும் துறக்க விரும்பிப் பல இடங்களிற் சஞ்சரிக்கையில், வேதாரண்யத்தில், இவர் தமையனார் இதைத் தெரிந்து, இவரைத் தேடிப் பிடித்துக் குலம் விளங்க ஒரு பெண்ணை மணஞ் செய்வித்தனர். இப்பெண் ஒரு குழந்தையைப் பெற்று உயிர் துறக்க, நம் சுவாமிகள், அதுமுதல் தாம் பற்றற்ற பெருந் துறவியாகி, மௌனசுவாமிகளின் உபதேசத்தைப் பெற்று: 1644 – லிருந்து திருச்சியில் அம்மௌன குருமடத்திற்குத் தலைமை பூண்டு அங்கிருந்து பல இடங்களுக்கும் சென்று, கடவுளின் தன்மையையும், உலகியற்றன்மையையும், ஞானத்தின் பெருமையையும் தமிழில் மிக உருக்கமான

பாட்டுக்களாக அமைத்து, அன்பர்கள் வாயாரப் பாடி நற்கதியடையும்படி செய்தனர். சில காலம் சென்ற பிறகு, இவர் 1662-ம் வருஷம் தைமீ 28உ விசாகத்தன்று, இராமநாதபுரத்துக் கருகே விதேகமுத்தியுற்றனர்.

**இந்தத் தாயுமானார் சிறந்த அநுபவாத்வைதி.**

**பொய்கண்டார் காணாப் புனிதமா மத்துவித**
**மெய்கண்ட நாதனருள் மேவுநா ளெந்நாளோ**

என்று இவர் பாடியிருக்கிறார். இதை ஆதாரமாகக் கொண்டு, தாயுமானார், மெய்கண்டார் கூறும் பேதவாதத்தை அனுஸரித்தவர் என்று சிலர் சந்தேகிக்கின்றனர்.

துவைதம் அத்வைதத்துக்குச் சாதனமாயிருப்பதாலும், மெய்கண்டாரும் அத்வைதி என்பதாலுமே தாயுமானார் மெய்கண்டாருக்கு வணக்கம் கூறுகிறார் என்று கொள்ள வேண்டும்.

அத்வைத நூலாகிய திருமந்திரத்தைத் திருவாய்மலர்ந்தருளிய திருமூலரது அத்வைத மரபே தாயுமானாரது குருமரபாயிருப்பதாலும், ஸனகாதிகட்கு அத்வைதோபதேசஞ் செய்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியையும், ஸனகாதிகள், சுகர், வாமதேவர், ஜனகர் முதலிய அத்வைதிகளை வணங்கிப் புகழ்ந்திருப்பதாலும், தாயுமானார் பேதவாதியல்லர் என்பது தெளிவாகிறது.

மேலும், தாயுமானார் 'உலகம் பொய்; துவைதம் பொய்; சிவமொன்றே உண்மை' என்ற அத்வைத உண்மைகளை நாட்டியிருக்கிறார்.

பாடல்கள் மிக எளிய தாயுமானாரது மிக எளிய நடையில், மிக உயர்ந்த அநுபவக் கருத்துக்களை உள்ள முருக எடுத்தோதி, ஞானத்தைத் தந்து முத்திபெறச் செய்யும் ஆற்றல் உடையவை. இவரது திருவாக்கில் அமைந்துள்ள அரிய அத்வைதக் கருத்துக்களிற் சில உதாரணங்களாகத் தரப்படுகின்றன.

## கடவுள் எங்கும் நிறைந்தவர்

தாயுமானார் தமது நூலில் முதற்கவியில் பரமசிவவணக்கத்தில்

**அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்**
**ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது.**

- திருவருள் விலாசப் பரசிவ வணக்கம் 1.

என்று கூறுகிறார். இவ்வாறே,

**பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற**
**நிறைகின்ற பரிபூரணா னந்தமே. பரிபூரணானந்தம் 10**

**சர்வபரி பூரண அகண்டதத் துவமான**
**சச்சிதானந்த சிவமே. சச்சிதானந்த சிவம் 11.**

**இகபர மிரண்டினும் உயிரினுக் குயிராகி**
**எங்கும் நிறைகின்ற பொருளே.- எங்குநிறைகின்ற பொருள் 11.**

என்ற பாடற் பகுதிகள் இறைவனது சர்வவியாபகத்தன்மையை விளக்குகின்றன.

**இறைவனையன்றி வேறொன்றுமில்லை**

ஒன்றான பரம்பொருளே எல்லாமாய்த் தோன்றுகிறது. பரம்பொருள் காரணம்; உலகம் காரியம்; காரணமே காரியமாகிறது; மண்ணே குடமாகிறது; அதுபோல இறைவனே எல்லாமாகிறான் என்பத அத்வை தக்கொள்கையிற் கண்ட தாயுமானார் பாடல்களில் விளங்குகிறது.

**அத்தனையும் நீயலது எள் அத்தனையும் இல்லையெனில்**
**யாங்கள் உனையன்றி யுண்டோ. - ஆனந்தமான பரம் 5.**

**தேகாதி உலகெங்கும் கலந்து தானே திகழ்**
**அநந்தா நந்தமயத் தெய்வக் குன்றே.**
**ஆகாரபுவனம், சிதம்பர ரகசியம் 1.**

**காணுங் கண்ணிற் கலந்தகண் ணேயுனைச்**
**சேணும் பாருந் திரிபவர் காண்பரோ**
**ஆணும் பெண்ணும் அதுவெனும் பான்மையும்**
**பூணுங் கோலம் பொருந்தியுள் நிற்கவே.- பொன்னை மாதரை 5**

**அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறாய்**
**அமர்ந்ததென அகிலாண்டம் அனைத்து மாகிப்**
**பகர்வனஎல் லாமாகி அல்ல தாகிப்**
**பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்**

**துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்**
**தோயாத அறிவாகிச் சுத்த மாகி**
**நிகரில்பசு பதியான பொருளை நாடி**
**நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்.**

பொருள் வணக்கம் 12.

**வானாதி பூதமாய் அகிலாண்ட கோடியாய் மலையாகி வளைகடலுமாய்**
**மதியாகி இரவியாய் மற்றுள எலாமாகி வான்கருணை வெள்ளமாகி**
**நானாகி நின்றவனும் நீயாகி நின்றிடவும் நானென்ப தற்றிடாதே**
**நான்நான் எனக்குளறி நானாவிகாரியாய் நானறிந் தறியாமையாய்**

ஆனந்தமான பரம் 7.

**அவனே பரமும் அவனே குருவும்**
**அவனே யகில மனைத்தும் அவனே தாம்**
**ஆனவரே சொன்னால் அவரே குருவெனக்கு**
**நானவனாய் நிற்பதெந்த நாள். - உடல் பொய்யுறவு 63.**

**ஒளியு மாய்நிறை வெளியுமாய் யாவுமாம் உரவோய்**

-எனக்கெனச் செயல் 22.

**எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்**
**அங்கங் கிருப்பதுநீ அன்றோ பராபரமே. -பராபரக்கண்ணி 84.**

## உலகத்தோற்றம் மாயை

உலகத்தோற்றம் உண்மையன்று என்பது அத்வைதத்தில் சிறந்ததொரு கொள்கை. இதைத் தெரிவிக்கும் தாயுமானார் திருவாக்குகள் வருமாறு:

**இந்திரசாலங்கனவு கானலின் நீ ரென வுலகம்**

பொருள் வணக்கம் 6.

**வந்ததோர் வாழ்வுமோர் இந்த்ரசா லக்கோலம்.**

- தேசோ மயானந்தம் 3.

.............................. அகிலமாயை
கான்முயற் கொம்பே என்கோ கானலம் புனலே என்கோ
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்ப வேண்டும்.

தேன்முகம் 1.

(என்கோ - என்பேனோ ; முளரி - தாமரை)

கும்பிட்டுச் சகம் பொய்யெனத் தம்பட்ட மடியே.

-நினைவொன்று 6.

பொய்யா ருலகம் நிலையல்ல கான புனலெனவே
மெய்யா அறிந்தென்ன என்னா லிதனை விடப்படுமோ.

பாயப் புலி 19.

பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல்
ஆருந் துறக்கை அரிதரிது.

-உடல் பொய்யுறவு 57.

ஆக்குவை மாயை யாவும் நொடியினில் அவற்றை மாள
நீக்குவை நீக்க மில்லா நினைப்பொடு மறப்பு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளானந்தத்
தாக்கவுஞ் செய்வா யன்றோ சச்சிதா னந்த வாழ்வே.

தங்குவ - ஆக்குவை 1.

பாராதி யண்டமெலாம் படற்கானற் சலம்போல்
பார்த்தனையே முடிவில்நின்று பாரெதுதான் நின்ற
தாராலும் அறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீ யெங்கிருந்தும் அதுவாவை கண்டாய்.

நினைவொன்று 5.

எனதென்பதும் பொய் யானெனல் பொய்
எல்லா மிறந்த இடங்காட்டும்
நினதென்பதும் பொய் நீயெனல்பொய் நிற்கும்
நிலைக்கே நேசித்தேன்.

தனைவொன்று 5.

விதிக்கும் பிரபஞ்ச மெல்லாம் சுத்த
வெயில்மஞ்ச ளென்னவே வேதாகமங்கள்
மதிக்கும் அதனை மதியார்- அவர்
மார்க்கந்துன் மார்க்கஞ்சன் மார்க்கமோ மானே.

-ஆனந்தக் களிப்பு 28.

அண்டபகி ரண்டமு மாயா விகாரமே
அம்மாயை யில்லா மையே. -ஆனந்தக் களிப்பு

ஐந்து பூதமுமொரு கான னீரென. - சிற்சுகோதய விலாசம் 3.

கடத்தை மண்ணெனல் உடைந்த போதோ விந்தக் கருமச்
சடத்தைப் பொய்யெனல் இறந்தபோ தோசொலத் தருமம்.

-ஆசையெனும் 31.

பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே

-காண்பேனோ என் கண்ணி 6.

கானற் சலம்போன்ற கட்டுழலைப் பொய்தீர

எந்நாட் கண்ணி, ஆநந்த இயல்பு 12.

இமையளவு போதையொரு கற்ப காலம் பண்ணும்
இவ்வுலகம் எவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கும் மாதர்சிற் றின்பமோ
என்னில்மக மேருவாகிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாளு மாக்கிநாளுந்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ்
சூறையிட் டிந்த்ரசாலம்
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
அம்மம்ம வெல்ல எளிதோ.

சச்சிதானந்த சிவம் 4.

(வளரும்)

# இடர்நீக்கும் திருமுறைகள்

## சிவாயநம:

**தலம்: சீர்காழி** **பயன்: இறையருள் பெருகும்**

*1.* **தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்**
**காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த**
**பீடுடைய பிரமாபுரம் மேவிய எம்மான் இவன் அன்றே.**

*தாமரை மலரில் அமர்ந்த பிரமன் வணங்கிப் பாடிட அவனுக்கு அருளைச் செய்தவன் சிவபெருமான்; அவன் பெருமையையுடைய சீர்காழியில் விரும்பித் தங்கியவன்;தன் ஒற்றைச் செவியில் தோடு அணிந்தவன்: காளையை வாகனமாகக் கொண்டவன்; பிறை நிலவைச் சூடியவன்: காட்டின் சாம்பலை மேனியில் பூசிக் கொண்டவன்; அத்தகைய பெம்மான் இவனல்லவோ. என் உள்ளம் கவர்ந்த கள்வனாய் அருள் செய்தவன்.*

**தலம்: கீழைத் திருக்காட்டுப்பள்ளி** **பயன்: அல்லல் நீங்கும்**

*2.* **திரைகள் எல்லாம் அலமரும் சுமந்து**
**செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்**
**கரைகள் எல்லாம் மணிசேர்ந்து உரிஞ்சிக்**
**காவிரி காபொரு காட்டுப் பள்ளி**
**உரைகள் எல்லாம் உணர்வெய்தி நல்ல**
**உத்தமராய் உயர்ந்தார் உலகில்**
**அரவமெல்லாம் அரை ஆர்த்த செல்வர்க்கு**
**ஆட்செய்ய அல்லல் அறுக்க லாமே**

*காவிரியின் வாய்க்கால் பலவும் மலர்களைச் சுமந்தும் மணிகள், முத்துக்கள், பொன் ஆகியவற்றைக் கொண்டு வந்தும் கரைகளில் சேர்த்தவாறு உராய்ந்து செல்லும் திருத்தலம் கீழைத்திருக்காட்டுப்பள்ளி. இங்கு, பாம்புகளை இடுப்பில் கட்டிய சிவபெருமானுக்கு வேதம் முதலியவற்றின் பொருளுணர்ந்தவராய் நல்ல உத்தமராய்த் தொண்டு செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யும்போது நம் அல்லல் அகலும்.*

*திருஞானசம் பந்தர்*

**தலம் : திருவலிவலம். பயன் : இடர் நீங்கும்**

3. பிடியதன் உரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனது அடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே

*மிகுதியாய்க் கொடுப்பவரும் அழகிய வடிவினருமான வள்ளல்கள் வாழும் திருவலிவலத்தில் அமர்ந்தவன் இறைவன் சிவபெருமான். அவன். உமையம்மை பெண்யானை வடிவு கொள்ளத் தான் ஆண்யானை வடிவினனாகி நின்றான். அவன் தன் திருவடிகளை வழிபடும் அடியவர்தம் இடர்கள் நீங்கக் கணபதியைத் தோன்றச் செய்தான்.*

**தலம்: திருச்சாய்க்காடு பயன்: நற்கதி கிட்டும்**

*4.* நீ நாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய்! யார் அறிவார்
சாநாளும் வாழ்நாளும்; சாய்க்காட்டு எம்பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்ப, புகழ் நாமம் செவிகேட்ப,
நா நாளும் நவின்று ஏத்தப் பெறலாமே நல்வினையே.

*நன்னெஞ்சே! நீயே நினைத்துப்பார்; யாரால் வாழ்நாளையும் இறுதி நாளையும் அறிந்து கொள்ள முடியும்? எனவே இருக்கும் நாட்களில் இறைவனுக்காகப் பூக்களைத் தலையில் சுமந்து வருவோம்: இறைவனுடைய திருநாமங்களைச் செவியில் குளிரக் கேட்போம். அவன் புகழை நாவினால் தினமும் பாடி வருவோம் திருச்சாய்க்காட்டு ஈசனை இவ்வாறு வழிபட்டு நற்கதியை நாம் அடைவது உறுதியாம்.*

**தலம்: திருவெண்காடு பயன்: பயிர் செழிக்கும்**

*5.* **கண்காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும் பிறைகாட்டும் சடையானும்
பண்காட்டும் இசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டில் உறைவானும் விடைகாட்டும் கொடியானே.**

*திருவெண்காட்டில் இருக்கும். காளை பொறித்த கொடியையுடைய சிவபெருமான். நெற்றியில் கண்ணுடையவன்; கையில் நெருப்பை ஏந்தியவன். உமையை ஒரு*

*பாகத்தில் கொண்டவன்; பண்களோடு கூடி இசை வடிவானவன். அவன் பயிரை வளர்க்கும் மேகமும் ஆனவன்.*

*சுந்தரமூர்த்தி*

**தலம்: தில்லை** **பயன்: யமபயம் நீங்கும்**

**பேராது காமத்தில் சென்றாற் போல்**
**அன்றியே பிரியாது உள்கிச்**
**சீரார்ந்த அன்பராய்ச் சென்று முன்**
**அடிவீழும் திருவினாரை**
**ஓராது தருமனார் தமர் செக்கில்**
**இடும்போது தடுத்தாட் கொள்வான்**
**பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்**
**பெருமானைப் பெற்றாம் அன்றே**

*மனமே! அடியவர் இடையறாத காமத்தில் செல்லாது. இறைவனைப் பிரியாது நினைத்து, சிறப்புடைய அன்பராய்ச் சென்று இறைவன் திருவடி வணங்குவர். அத்தகைய திருவுடையவரை ஆராயாது காலதூதர் செக்கிலிடும்போது தடுத்தாட்கொள்வான் இறைவன்; பேராளர் பலர் வாழும் சிதம்பரத்தில் சிற்றம்பலத்தில் அவன் இருக்கிறான் அவனை அன்றோ நாம் அடைந்தோம்.*

**நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு**

*உணவை உண்டுபண்ணி தானும், உணவாக விளங்கும் நீர் இல்லாமல் எந்த உயிர்க்கும் உலக வாழ்க்கை நடைபெறாது. இதைப் போல மக்களிடம் ஒழுக்கம் இல்லையெனில் வான் மழை பொழியாது.*

*(குறள் 20)*

*யக்ஞத்திலிருந்து மழை வருகிறது. மழையினின்று உணவும், உணவினின்று உயிர்களும் உண்டாகின்றன.*

***(ஸ்ரீமத் பகவத்கீதை 3 - 14)***

# தை மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| *15-01-2024* | திங்கள் | உத்தராயண புண்ய காலம், தை பொங்கல் |
| *16-01-2024* | செவ்வாய் | மாட்டுப்பொங்கல் |
| *21-01-2024* | ஞாயிறு | ஏகாதசி |
| *22-01-2024* | திங்கள் | த்வாதசி |
| *23-01-2024* | செவ்வாய் | ப்ரதோஷ பூஜை |
| *24-01-2024* | புதன் | பௌர்ணமி பூஜை |
| *02-02-2024* | வெள்ளி | ஸ்வாதி வேத பாராயணம் |
| *04-02-2024* | ஞாயிறு | அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| *06-02-2024* | செவ்வாய் | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் ஏகாதசி |
| *07-02-2024* | புதன் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| *08-02-2024* | வியாழன் | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| *10-02-2024* | சனி | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| *19-01-2024; 26-01-2024 ; 02-02-2024; 09-02-2024* வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

## வாசகர்கள் அனைவருக்கும்
## இனிய புத்தாண்டு
மற்றும்
## பொங்கல் நல்வாழ்த்துக்கள்

# ராஜதரங்கிணி 11

பி. ஆர். கண்ணன்

தரங்கம் 4

## ராஜா குவலயாபீடர்

லலிதாதித்யரின் புத்ரர் குவலயாபீடர் ராஜரிஷியைப் போல் இருந்தார். அவருடைய எண்ணங்கள்:

**க்ருதக்நஸ்யாஸ்ய காயஸ்ய ஹேதோரகலிதஸ்ம்ருதே: ।**

**ஹந்தவ்யா: கஸ்ய பந்தாந:: ப்ரதிபாந்த்யநபாயிந: ।। 384 ।।**

'நினைவு தப்பாத எந்த மனிதருக்கு, இந்த நன்றிகெட்ட சரீரத்திற்காக, ஸனாதனமான தர்மப் பாதைகளை அழிக்கத் தோன்றும்.' கடைசியில் ராஜ்யத்தை விட்டுவிட்டு காட்டிற்குள் மறைந்தார்.

## ராஜா வஜ்ராதித்யர் என்ற வாப்பியகர்

குவலயாபீடரின் இளவல் வஜ்ராதித்யர் அவருக்கு நேர்மாறான நடத்தை கொண்டிருந்தார். தன் ப்ரஜைகள் பலரை ம்லேச்சர்களுக்கு விற்றார். பல ம்லேச்ச பழக்க வழக்கங்களை தன் ராஜ்யத்தில் தொடங்கி வைத்தார்.

## ராஜா ஜயாபீடர்

லலிதாதித்யரின் பேரனான இவர், பாட்டனாரைப் போல், பல திக்விஜயங்களைச் செய்து புகழடைந்தார். தனியாகவே வேறு ப்ரதேசங்களில் சென்று, வீரத்தைக் காண்பித்தார். ஒருசமயம் திக்விஜயத்திலிருந்து திரும்பி வந்து, தன் மைத்துனர் ஜஜ்ஜா பதவியை அபகரித்த காரணத்தினால் அவரைக் கொன்றார். ராஜா மஹலன்புரம் என்ற நகரை நிறுவி, விபுலகேஸவர் ஆலயத்தையும் நிர்மாணித்தார். அவருடைய பத்னி கமலாவும் கமலாபுரம் நகரை நிறுவினாள்.

தொலைவிலுள்ள ப்ரதேசங்களிலிருந்து அறிஞர்களை ராஜா வரவழைத்தார். பதஞ்ஜலியின் மஹாபாஷ்யத்தை திரும்பவும் தேசத்திற்குக் கொண்டு வந்தார். காஷ்மீரத்தில் பல ராஜாக்கள் மஹாபாஷ்யத்தையும், ஸம்ஸ்க்ருத வ்யாகரணத்தையும்

போற்றியிருக்கின்றனர். ஜயாபீடர் ராஜா என்பதைவிட பண்டிதர் என்று பெயரெடுத்தார். உத்படர் போன்ற அறிஞர்களும், தாமோதரகுப்தர், மனோரதர், சங்கதந்தர் போன்ற கவிகளும் அவருடைய ஸபையை அலங்கரித்தனர்.

பல நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றிய ராஜா, லங்கையிலிருந்து வந்த ராக்ஷஸர்களைக் கொண்டு ஒரு பெரும் ஏரியை நிர்மாணித்தார். ஜயபுரம், வினயாதித்யபுரம் ஆகிய நகரங்களை நிறுவி, சிவன், விஷ்ணு ஆலயங்களைக் கட்டினார். ஸ்ரீநகரில் ஜயதேவி ஆலயத்தையும் ஏற்படுத்தினார்.

ஆனால் காலப்போக்கில் ராஜா கொடூரமாக ஆகி, பண்டிதர்களை அவமதிக்கத் தொடங்கினார். ப்ராம்மணர்களை வதம் செய்து, அவர்களின் சொத்துக்களை பிடுங்கினார். ஒருசமயம் துலாமூல்யா (தற்போதைய துலாமூலா) விலிருந்து ஸபைக்கு வந்த ப்ராம்மணர்கள் மிகுந்த கோபத்திலிருந்தனர். அவர்கள் கூறினர்: மனு, மாந்தாதா, ராமர் போன்ற ராஜாக்கள் கூட ப்ராம்மணர்களை அவமதித்ததில்லை; நீங்களே இவ்வாறு செய்யும் முதல் ராஜா என்று. ராஜா அவர்களை அயோக்யர்கள் என்று சொல்லி, ராஜாவின் தானத்தில் பிழைக்கும் நீங்கள் ரிஷிகள் மாதிரி பேசுவதா என்று பரிகசித்தார். இடிலர் என்ற ஒரு ப்ராம்மணர் மிக்க கோபங் கொண்டவராய், 'யுக மாறுபாட்டிற்கேற்ப, ராஜா எவ்வாறோ, அவ்வாறே நாங்களும் ரிஷிகள் அல்லவோ' என்றார். ராஜா அகந்தையுடன் 'நீர் என்ன விஸ்வாமித்ரரா, தபோதனரான வஸிஷ்டரா, அல்லது அகஸ்த்யரா' எனவே, இடிலர் அதீத சினத்துடன் படமெடுத்த பாம்புபோல் ஒளிர்ந்தார். அவர் 'நீர் ஹரிஸ்சந்த்ரராகவோ, த்ரிஸங்குவாகவோ, நஹுஷராகவோ இருக்கும் பக்ஷத்தில், நான் விஸ்வாமித்ரராக இருக்கத் தக்கவன்தான்' என்றார். ராஜா நகைத்து, 'விஸ்வாமித்ரர் கோபத்தால் ஹரிஸ்சந்த்ரர் அழிந்தார்; உம் கோபத்தால் என்னவாகும்' என்றார். கோபத்தின் உச்சியை அடைந்த இடிலர் தரையின்மீது கையினால் அறைந்து, 'நான் கோபப்பட்டால், ப்ரம்மதண்டம் உம் மீது ஒரு க்ஷணத்தில் ஏன் விழாது' என்றார். இடிலர் ராமாயணத்தில் வரும் வஸிஷ்டரின் ப்ரம்மதண்டம் விஸ்வாமித்ரரின் பெரும் சேனையை வீழ்த்தியதை மனதில் கொண்டு இவ்வாறு சொன்னார். வஸிஷ்டரின் ப்ரம்மதண்டம் விஸ்வாமித்ரரின் எல்லா தெய்வீக அஸ்த்ரங்களயும் விழுங்கிய நிலையில், விஸ்வாமித்ரர் சொன்னது ப்ரஸித்தமானது.

**திக்பலம் க்ஷத்ரிய பலம் ப்ரஹ்மதேஜோ பலம் பலம் ।**
**ஏகேந ப்ரஹ்மதண்டேந ஸர்வாஸ்த்ராணி ஹதாநி மே ।।** (1.56.23)

'ப்ராம்மணரின் ஒளியே பலம்; க்ஷத்ரியனின் ஆயுதபலம் எம்மாத்திரம். ஒரேஒரு ப்ரம்ம தண்டத்தினால் என்னுடைய எல்லா அஸ்த்ரங்களும் வீழ்த்தப்பட்டனவே' என்று விஸ்வாமித்ரர் அங்கலாய்த்தார்.

இப்போதும், ராஜா ஜயாபீடர் நகைப்புடன் 'பின் ஏன் தாமதம், ப்ரம்மதண்டம் விழட்டுமே' என்றார். இடிலர் உடனே 'ஈனமானவனே, இதோ ப்ரம்மதண்டம் விழுவதைப் பார்' என்றார். அந்த க்ஷணமே, ராஜாவின் மேலிருந்த விதானத்திலிருந்து ஒரு பொன்னாலான தடி ராஜாவின்மீது விழுந்தது. ராஜா சில நாட்களில் மரணமடைந்தார். ராஜாவின் தாயார், அம்ருதப்ரபா ராஜாவின் ஸத்கதிக்காக அம்ருதகேஸ்வர் ஆலயம் கட்டினாள்.

அடுத்த ராஜா ஜயபீடரின் புத்ரர் லலிதாபீடர் கெட்ட வழியில் கஜானா பணத்தை சுய இன்பங்களுக்காக செலவிட்டார். அதன்பின் ஸங்க்ராமபீடர், பின்னர் சிப்படஜயாபீடர் ராஜபதவியில் அமர்ந்தனர். சிப்படஜயாபீடரும் ஆபிசார ப்ரயோகத்தில் மரித்தார்.

## ராஜா அஜீதபீடர்

இவர் ராஜாவாகி பல ஆலயங்களை நிர்மாணித்தார்: உத்பலபுரத்தில் உத்பலஸ்வாமி; பத்மபுரத்தில் பத்மஸ்வாமி, விஜயேஸ்வரர், தர்மஸ்வாமி, விஷ்ணு கல்யாண ஸ்வாமி. மேலும் அமரநாதரின் குகைக்குச் செல்லும் வழியிலுள்ள மாமலேஸ்வரர் கோவிலைப் புதுப்பித்தார். அந்த கோவிலின் புனருத்தாரண பூஜையின் போது 85,000 பசுக்களையும், ஒவ்வொரு பசுவிற்கும் 5000 தினார் நாணயங்களையும் அந்தணர்களுக்கு தானமாக வழங்கினார்.


உட்பகையினால் ராஜாவின் வீழ்ச்சி ஏற்பட்டது. அனங்கபீடர், உத்பலபீடர் ஆகியோர் பின்னர் ராஜாக்களாயினர்.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 16

## ஸ்ரீ பத்மபாதர்

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதரின் முதல் சீடர் ஸ்ரீ பத்ம பாதாசார்யர். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். சிதம்பரத்தில் இவர் பிறந்தார் என அறியப்படுகிறது. இவர் பகவான் விஷ்ணுவின் அம்சமாக அவதரித்தவர். ஸநந்தனர்' என்பது இவரது இயற்பெயர். காசியில் முகாமிட்டிருந்த ஸ்ரீ சங்கரரைச் சென்றடைந்து சீடரானார். அவர் மூலமே ஸந்யாஸாச்ரமம் பெற்றார். பகவத்பாதருக்குப் பிரியமான சீடராக இருந்தார். ஆசாரியர் ஸநந்தனரிடம் மட்டும் அதிக பிரியத்தோடு இருக்கிறார் என்று மற்ற சீடர்களின் மனதில் பொறாமை எழுந்தது. இதை ஊஹித்தறிந்தார் பகவத்பாதர்.



ஸநந்தனருடைய குரு பக்தியின் ஆழத்தையும், வீச்சையும் மற்ற சீடர்கள் உள்ளபடி உணராததால் பொறாமை கொள்கின்றனர் என அறிந்தார். ஒரு நாள் கங்கையின் கீழ்கரையில் நீராடிக் கொண்டிருந்தார் பகவத்பாதர். ஸநந்தனர் அக்கரையில் இருந்தார். அப்போது உலர்ந்த வஸ்த்ரம் எடுத்து வரும்படி ஸநந்தனரைக் கூவியழைத்தார். குருவின் குரலைக் கேட்ட மாத்திரத்தில் உலர்ந்த வஸ்திரத்தை எடுத்துக் கொண்டார். வழியில் பெருவெள்ளமாகக் கங்கை பிரவஹித்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்தார். நீரில் இறங்கினார். இவரது குருபக்தியின் மேன்மை உணர்ந்த கங்கா தேவி ஸநந்தனர் தன் மேல் பாதம் வைத்த இடங்களெல்லாம் தாமரை மலரச் செய்து தனது திருக்கரங்களால் தாங்கினாள்.

இக்காட்சியைக் கண்டு அனைவரும் வியந்தனர், போற்றினர், வணங்கினர். மற்ற சீடர்கள் இவரது பெருமை உணர்ந்து அருமையுடன் கொண்டாடினர். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு இவரை 'பத்மபாதர்' என்று உலகம் கொண்டாடியது. இவர் தனது குருவான ஸ்ரீ சங்கரரை 'சிஷ்டாக்ரணீ:' சாஸ்திர நெறியில் நிற்பவர்களுக்குள்ளேயே

முதன்மையானவர் என்று குறிப்பிடுகிறார். பகவத்பாதரின் ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்திற்கு பஞ்ச பாதிகா' என்ற அற்புதமான ஒரு உரை எழுதியுள்ளார்.

ஒரு சமயம் இவர் ராமேச்வரம் யாத்திரை சென்றார். அப்போது போகும் வழியில் ஸ்ரீரங்கத்திலுள்ள இவரது உறவினர் இல்லத்தில் தான் கையில் பெருமதிப்புடன் கொண்டு வந்திருந்த பஞ்ச பாதிகா உரையின் சுவடிக் கட்டை பாதுகாக்கச் சொல்லிவிட்டுச் சென்றார்.

பத்மபாதர் புறப்பட்டுச் சென்றபின் ஒருநாள் யத்ருச்சையாக அவர் கொடுத்து விட்டுப் போயிருந்த சுவடிக்கட்டைப் பிரித்துப் படித்தார். இவர் அடிப்படையில் பூர்வ மீமாம்ஸா சித்தாந்தத்தில் நன்கு கற்றுத் தேர்ந்தவர். அதில் உறுதியான பிடிப்புள்ளவர். பஞ்சபாதிகா உரையைப் படிக்கப் படிக்க, மறுக்கப்பட முடியாத வாதங்களின் அடிப்படையிலும், சாஸ்திர பிரமாணங்களுடனும், கர்ம காண்டம் கண்டிக்கப் பட்டிருப்பதையும், ஞான காண்டம் நிறுவப்பட்டிருப்பதையும் கண்டார். கோபம் தலைக்கேறியது. **'க்ருத்த: பாபம் கிம் ந குர்யாத்?'** என்ன செய்கிறோம் என்ற நினைப்பின்றி அந்த சுவடிக் கட்டுக்குத் தீவைத்து எரித்து விடத் துணிந்தார். திடீரென ஒரு யோஜனை உதித்தது. சுவடியை எரித்து விட்டால் நாளைக்கு வந்து கேட்டால் பதில் சொல்ல வேண்டுமே. காணாமற் போய் விட்டது என்று பொய் சொல்ல முடியாது. எனவே ஆத்திரத்தில் தன் வீட்டிற்கே தீ வைத்து கொளுத்தி விட்டார். சுவடிக் கட்டும் சாம்பலாயிற்று. பத்மபாதர் வந்தால் சமாளித்துப் பதில் சொல்லிக் கொள்ளலாம் என தீர்மானித்தார்.

பலநாட்கள் கழித்து ஸ்ரீரங்கம் திரும்பி வந்தார் பத்மபாதர். உறவினர் இல்லத்தையே காணோம். பிறகு விசாரித்து உறவினரைத் தேடிக் கண்டு பிடித்தார். நடந்தவை பற்றி அறிந்தார். வருந்தினார். மனம் ஒடிந்து போனார். மிகுந்த தாபத்துடன் குரு இருக்குமிடம் வந்தார். நடந்தவற்றைக் கூறி விழுந்து புலம்பினார். ஸ்ரீ சங்கரர் அவரைத் தேற்றினார்.

'பத்மபாதரே! துயரம் வேண்டாம். நீர் உரை எழுதிய போது முதலில் சில பகுதிகளை என்னிடம் காண்பித்து சரியாக இருக்கிறதா என்று பார்த்து அங்கீகரிக்கச் சொன்னீர். நான் படித்த பகுதி வரையில் எனக்கு நினைவில் உள்ளது. வருந்தாதீர். 'நான் சொல்கிறேன். திரும்ப எழுதிக் காப்பாற்றுங்கள்'. பார்த்திருந்த ஐந்து பாதங்களின் உரையைச் சொல்லச் சொல்ல பத்மபாதர் எழுதிக் கொண்டார். இதனாலேயே இவ்வுரை 'பஞ்ச பாதிகா' (ஐந்து பாதங்களைக் கொண்டது) என வழங்கப்பட்டது. ஸ்ரீ சங்கரர் தனது ஸூத்ர பாஷ்யத்திற்கு ஒரு முன்னுரை எழுதியுள்ளார். இதற்கு

‘அத்யாஸ பாஷ்யம்’ என்று பெயர். இப்பகுதிக்கு பத்மபாதர் தனது பஞ்சபாதிகா உரையில் மிக விரிவான விளக்கங்களுடன் எழுதியுள்ளார். ஐந்து பாதங்களுக்கான உரை கிடைத்தது என்றாலும் இன்று நமக்கு முதல் நான்கு ஸூத்ரங்களுக்கான உரையே கிடைத்துள்ளது. இதற்கு பத்து விரிவுரைகள் எழுதப்பட்டுள்ளன என்பதே இந்நூலின் பெருமையை எடுத்துக் காட்டும். இவற்றுள் ‘பிரகாசாத்மன்’ என்பவர் எழுதிய ‘பஞ்சபாதிகா விவரணம்’ மிகவும் புகழ் பெற்றது. ஸ்ரீ சங்கரரின் ‘பிரபஞ்ச ஸாரம்’ எனும் நூலுக்கும், ‘ஆத்ம போதம்’ எனும் ப்ரகரண க்ரந்தத்திற்கும் மிகத் தெளிவான உரையை எளிய நடையில் எழுதியுள்ளார். ‘ஸ்வரூபானுபவம்’ என்று ஒரு வேதாந்த நூல் எழுதியுள்ளார். இவரது ‘சிவ பஞ்சாக்ஷரீ பாஷ்யம்’ என்ற நூல் பஞ்சாக்ஷர மந்த்ரம் எவ்வாறு அத்வைத தத்துவத்தின் அனுபவ விளக்கமாக இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்தியம்புகிறது.

ஸ்ரீ சங்கரர் தான் முதலில் நிறுவிய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்திற்கு ’பத்ம பாதரை’ முதல் பீடாதிபதியாக நியமித்தார் என்று ஸ்ரீ ஆனந்தகிரி, சங்கர விஜயம் முதலான நூல்கள் கூறுகின்றன. பூரி மடத்தின் பொறுப்பை முதலில் ஏற்றார் என்று சிலர் கூறுகின்றனர். ஸ்ரீ ப்ரகாசாத்மனால் எழுதப்பட்ட பஞ்ச பாதிகா விவரணத்திற்கு ‘தத்வ தீபனம்’ என்று ஒரு உரையை ஸ்ரீ அகண்டானந்தர் எழுதியுள்ளார். அத்வைத சித்தாந்தத்தில் ஈடுபாடுள்ள அனைவரும் சதுஸ்ஸூத்ரீ பாஷ்யம், பஞ்ச பாதிகா, பஞ்ச பாதிகா விவரணம், தத்வ தீபனம் என்ற நான்கையும் கற்பது அத்வைதத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்து கொள்ள பெரிதும் உதவும்.

ஸ்ரீஹர்ஷரின் ‘கண்டன கண்ட காத்ய’ த்திற்கு வித்யாஸாகரீ என்ற உரை எழுதிய ‘ஸ்ரீ ஆனந்த பூர்ணர்’ பஞ்ச பாதிகாவிற்கு ஒரு உரை எழுதியுள்ளார். ‘ஸ்ரீ ந்ருஸிம்மாச்ரமர்’ என்பவர் ப்ரகாசாத்மனின் ’பஞ்சபாதிகா விவரண’த்திற்கு ‘பஞ்ச பாதிகா விவரண ப்ரகாசிகா’ என்று ஒரு உரை எழுதியுள்ளார். ‘ஸ்ரீ க்ருஷ்ணர்’ என்பவர் ‘பஞ்ச பாதிகா விவரண’த்திற்குத் தனியே ஒரு உரை எழுதியுள்ளார். ஸ்ரீ வித்யாரண்யர் ‘விவரண ப்ரமேய ஸங்க்ரஹம்’ என்று ஒரு நூல் எழுதியுள்ளார். இதில் ‘பஞ்ச பாதிகா விவரண’த்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தனித்தனியே எடுத்து விளக்கியுள்ள பாங்கு அனைவரையும் வியக்க வைக்கும். ‘ஸ்ரீ கோவிந்தானந்தர்’ என்பவர் ஆச்சார்யாளின் ஸூத்ர பாஷ்யத்திற்கு ‘ரத்ன ப்ரபா’ என்று ஒரு அரிய உரை எழுதியுள்ளார். இவரது சீடர் ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதி. இவர் விவரண உபந்யாஸ: ’ என்று பஞ்சபாதிகா விவரண’த்திற்கு அனுக்ரமாணிகாவுடன் இணைந்த ஒரு உரை

எழுதியுள்ளார். இவ்வுரைகள் அனைத்தும் 'ஸூத்ரபாஷ்ய'த்தின் பெருமையையும், 'பஞ்ச பாதிகா'வின் மேன்மையையும் பறை சாற்றுகின்றன.

'பஞ்ச பாதிகா' உரையையும் அதன் விவரண'த்தையும் அத்வைத வேதாந்தத்தின் ஸாரம் எனலாம். எல்லா ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களும் சித், அசித், ஈச்வரன் என்ற மூன்றை ஏற்றுக் கொள்கின்றனர். 'சித்' என்பது ஜீவனைக் குறிக்கும். 'அசித்' என்பது ஜடமான பிரகிருதி அல்லது காணப்படும் ஸ்தூல பிரபஞ்சத்தைக் குறிக்கும். 'ஈச்வரன்' 'சித்'திற்கும் 'அசித்'திற்கும் நியந்தாவாக அறியப்படுகிறார். அத்வைதம் தவிர மற்ற ஸம்ப்ரதாயங்கள் இம்மூன்றும் வேறு வேறு என்று நிர்ணயிக்கின்றன. அத்வைதம் மூன்றும் ஒன்றுதான் என்கிறது.

உபநிஷத்துக்களின் கருத்தின்படி ஒன்றுதான் உளது. அது 'ப்ரஹ்மம்'. இது இரண்டற்றது. இதுவே அவித்யை அல்லது மாயை'யின் ஸம்பந்தத்தால் ஈச்வரன் என்றும், ஜீவன் என்றும், ஜடமான பிரகிருதி என்றும் பிரித்தறியப்படுகிறது. மாயை, அவ்யாக்ருதம், பிரகிருதி, அக்ரஹணம், அவ்யக்தம், தமஸ், காரணம், லயம், சக்தி, மஹாசக்தி, நித்ராக்ஷரம், ஆகாசம் போன்ற சொற்களும் ஒத்த பந்தங்களே. இடத்தையும் காலத்தையும் பொருத்து வேறு வேறு சொற்களால் கூறப்படுகின்றன. அவித்யை அல்லது மாயைக்கும் ப்ரஹ்மத்திற்கும் இடையேயுள்ள உறவு பற்றி 'பஞ்சபாதிகா' விளக்கத்திற்கும் வாசஸ்பதி மிச்ர'ரின் கருத்திற்கும் அடிப்படையில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிம்ப பிரதி, பிம்ப வாதம், அவச்சேத வாதம், ஆபாஸ வாதம் என்று மூன்று உட்பிரிவுகள் இருக்கின்றன.

அத்வைத சித்தாந்தத்தில் ஆழங்காற்பட்டவர்களிடம் குருமுகமாக இது பற்றி நேரில் கற்றறிவது பயனளிக்கும். பத்மபாதர் பிரதிபிம்ப வாதத்திற்கும், வாசஸ்பதி மிச்ரர் அவச்சேத வாதத்திற்கும். ஸுரேச்வராசார்யர் ஆபாஸ வாதத்திற்கும் முன்னுரிமை அளிக்கின்றனர். மூன்று வாதங்களும் முப்பிரிகளாக இணைந்து அத்வைத சித்தாந்தத்திற்கு வலுவூட்டுகின்றன.

பத்மபாதர் ஸ்ரீ சங்கரரிடம் சிஷ்யராகி துறவறம் மேற்கொள்வதற்கு முன் சிறு வயதிலேயே ஒரு மஹான் மூலம் ந்ருஸிம்ம மந்திர உபதேசம் பெற்றார். மந்த்ர ஸித்தி பெற விரும்பி ஊருக்கு அருகில் இருந்த ஒரு வனத்திற்குச் சென்று தவமிருந்தார். பல நாட்களாயின. உணவும் நீருமின்றி தவத்திலிருந்தார். ஒரு நாள் ஒரு வேடன் ஏன் இப்படி உடலை வருத்திக் கொண்டு தவம் செய்கிறீர் என்று கேட்டான். கழுத்துக்குக் கீழ் மானுட உருவத்துடனும், கழுத்துக்கு மேல் சிங்க உருவத்துடனும் ஒரு விலங்கு இருக்கிறது. அது இங்கு இருக்கிறதோ என்று தேடி வந்தேன் என்றார்.

‘இக்காட்டில் அப்படி எனக்குத் தெரியாமல் ஒரு விலங்கு இருப்பதாகத் தெரியவில்லை. பாவம் நீர் தனியொருவராகத் தேடுகிறீர். நான் தேடிக் கண்டுபிடித்துத் தருகிறேன்’ என்றான். ஸநந்தனர் அவனது வெகுளித்தன்மையைக் கண்டு வியந்தார். ‘முடிந்தால் பிடித்துக் கொண்டு வா’, என்றார். ‘நாளை மாலைக்குள் பிடித்துக் கொண்டு வருகிறேனா இல்லையா, பார். என் காட்டில் எனக்குத் தெரியாமல் ஒரு மிருகம் இருக்க முடியுமா என்ன?’ என்று கூறிச் சென்றான். இருநாட்கள் இரவும் பகலுமாக, ஊணும் உறக்கமுமின்றித் தேடினான். மறுநாள் மாலை வந்தது. இருள் சூழ ஆரம்பித்தது. தவித்துப் போனான். அந்தணருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டுமே என்று துடித்தான். இயலாமற் போகவே தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்ள முயன்றான். கண் மூடி நின்றான். இதற்கு மேலும் பொறுக்க மாட்டாத பகவான் நரஹரி வடிவில் எதிரில் தோன்றினார். பயங்கரமாகக் கர்ஜித்தார். கர்ஜனையைக் கேட்டுத் திடுக்கிட்டு கண் விழித்தான். எதிரில் பரம்பொருளை நரஹரி வடிவில் கண்டான். படாரென்று பாய்ந்தான். காட்டுக் கொடிகளால் கட்டினான். தரதரவென தவத்திலிருந்தவர் முன் கொண்டு நிறுத்தினான். பாருங்கள் என்று கத்தினான். வேடன் கையில் பிடிபட்டிருந்த பரமன் பத்மபாதர் கண்களுக்குப் புலனாகவில்லை. வேடன் பாருங்கள் பாருங்கள் எனக் கத்தினான். அப்போது பகவானும் பயங்கரமாகக் கர்ஜித்தார். துடித்துப் போனார் பத்மபாதர். வேடனுக்குத் தர்சனம் கொடுத்து அவன் கையில் கட்டுப்பட்டுள்ள நீர் இத்தனை நாட்கள் தவம் புரிந்த எனக்குக் காட்சி கொடுக்காததன் காரணம் என்ன என்று கதறினார். அப்போது ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. ‘வேடனின் முரட்டு பக்தி பலகோடி பிறவிகளில் செய்யப்படும் தவத்திற்கு இணையானது. அவனது நம்பிக்கையைப் பொய்யாக்காமலிருக்கவும், உனது வாக்கை ஸத்யமாக்கவும் ‘ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்’, ‘நான் வேடனிடம் அகப்பட்டேன். நீ எனது மந்த்ர ஜபத்தில் சித்தி அடைந்து விட்டாய். தேவைப்படும் காலத்தில் நானே வருவேன். வருந்தாதே’ என்று கூறி விட்டு பகவான் வேடனுக்கும் அனுக்ரஹம் செய்து விட்டு அந்தர்தானமடைந்தார்.

ஸ்ரீ சங்கரர் வாமாசார வழிபாட்டு முறையைப் பின்பற்றி வந்த காபாலிக மதத்தைக் கண்டித்துத் தனது திக்விஜய காலத்தில் உபதேசத்தால் பலரைத் திருத்தி ஸாத்விக உபாஸனை மேற்கொள்ளச் செய்தார். தங்கள் மதம் இவரால் அழிந்து விடுமோ எனப் பயந்தனர். பரமயோகியான ஸ்ரீ சங்கரரை எப்படியும் வெல்லமுடியாது என்று உணர்ந்து அவரைக் கொல்ல ஒரு சூழ்ச்சி செய்தனர். சீடர்கள் யாரும் அருகிலில்லாத நேரம்

பார்த்து காபாலிகர்களின் தலைவன் மோனத்திலிருந்த ஸ்ரீ சங்கரரைச் சரணாகதி பண்ணினான். தனது உபாஸனைக்கு ஒரு நர பலிவேண்டும். எல்லா ஸாமுத்ரிகா லக்ஷணங்களும் கூடிய ஒரு மன்னனோ அல்லது தங்களைப் போன்ற ஒரு ஆத்ம ஞானியோ தான் பலியிடத் தகுந்தவர். எனவே தாங்கள் பலியாகச் சம்மதிக்க வேண்டும் என்று வேண்டினான்.

சரணாகத வத்ஸலரும், கருணையே வடிவானவருமான பகவத்பாதர், சம்மதித்துத் தன்னையே பலி கொடுக்கத் தயாரானார். அது சமயம் பத்மபாதர் எங்கோ தொலைவில் இருந்தார். உபாஸனா மூர்த்தியான ந்ருஸிம்மர் இவர் சரீரத்தில் ஆவிர்பவித்தார். ஒரு நொடியில் பாய்ந்து வந்து காபாலிகர் தலைவனை கிழித்துப் போட்டார். மற்ற காபாலிகர்கள் பயந்து ஓடி மறைந்தனர். சொந்த பிரக்ஞைக்குச் சிறிது நேரம் கழித்து வந்தார் பத்மபாதர். உபாஸனா தெய்வத்தின் அனுக்ரஹத்தையும் குருவின் நிர்வ்யாஜமான கருணையையும் கண்டு கண்டு துதித்து மகிழ்ந்தார்.

காசியில் குருவுடன் வசித்து விசாரம் செய்து வருகிறார். ஒருநாள் ஒரு கிழவர் தன்னை மஹாபண்டிதர் என்று சொல்லிக் கொண்டு வந்தார். ஸ்ரீ சங்கரருடன் வாதம் புரிய வந்திருக்கிறேன் என்றார். ஸ்ரீ சங்கரரும் மனமகிழ்வுடன் வாதத்திற்கு வந்தார். பல நாட்கள் வாதம் நடைபெறுகிறது. யார் வெற்றி பெறுவார். யார் தோற்பார் என்று தீர்மானிக்க முடியாதபடி நடைபெறுகிறது. பத்மபாதர் விழித்துக் கொண்டார். வந்திருக்கும் கிழவர் சாமான்யமானவராக இருக்க முடியாது என்று உணர்ந்தார் தியானத்தில் அமர்ந்தார். ஞான திருஷ்டியில் கண்ட காட்சி அவரை உலுக்கி விட்டது.

**ஸங்கர: ஸங்கர: ஸாக்ஷாத்**
**வ்யாஸோ நாராயண ஸ்வயம் ।**
**தயோர் விவாதே ஸம்ப்ராப்தே**
**கிங்கர: கிங்கரோம்யஹம் ॥**

குருவான ஸ்ரீ சங்கரரைக் கயிலை நாதனாகக் கண்டார். கிழவர் வ்யாஸர் அவரோ பகவான் நாராயணர் எனக் கண்டார். கயிலையம் பதியும் வைகுண்ட பதியும் லீலா நிமித்தமாக இவ்வாறு வாதிடும் போது சங்கர கிங்கரனாகிய நான் செய்ய என்ன இருக்கிறது? ஸ்ரீ பத்மபாதருக்குக் கிடைத்த இத்தகையதொரு தர்சனம் வேறு எந்தவொரு சீடருக்கும் கிடைத்ததில்லை.

குரு சிஷ்ய உறவிற்கு எடுத்துக் காட்டான வாழ்க்கை வாழ்ந்தவர் பத்மபாதர்.

வளரும்

# முகாம் நிகழ்ச்சிகள்

*முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி*

### ஜபல்பூர் முகாம் 26.11.23 முதல் 28.11.23 வரை



பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் 25.11.23 ஜபல்பூர் வருகை தந்தார்கள். கீதாபவன் சந்நியாசி ராமானந்த சுவாமிஜி மற்றும் ஜபல்பூர் பக்தர்களால் ஸ்ரீஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வரவேற்கப்பட்டார்கள். 26.11.23 காலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள். தொடர்ந்து ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் நித்ய பூஜைகள் நடைபெற்றன. மாலை கார்த்திகை தீப பூஜையுடன பௌர்ணமி பூஜை மற்றும் சகஸ்ரநாம பாராயணமும் நடைபெற்றன.

27.11.23 காலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளியதை தொடர்ந்து கிருத்திகா சோமவார பூஜை ஆரம்பிக்கப்பட்டு மாலை சூர்ய அஸ்தமன நேரத்தில் முடிவுபெற்றது. இரவு சந்தியாஸாஸ்ரமத்தில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் உரை நிகழ்த்தினார்கள்.

28.11.23 பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் மூன்று கால பூஜைகள் முடித்த பின்னர் தத்தா ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள். பின்னர் முகாம் மத்யபிரதேச எல்லையை கடந்து நாக்பூர் இரவு 10.00 மணியளவில் வந்து சேர்ந்தது.

### நாக்பூர் முகாம் 29.11.23 முதல் 9.12.23 வரை

29.11.23 முதல் நாக்பூர் ராம் நகர் பகவத்பாத சபாவில் மூன்று கால பூஜை செய்தருளினார்கள். இத்தருணத்தில் பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளியதுடன் தீர்த்த பிரசாதமும் அளித்தருளினார்கள். பல்வேறு பகுதிகளுக்கு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் விஜயம் செய்தும் பாத பூஜைகள் நடைபெற்று குழுமியிருந்த பக்தர்களுக்கு அருளாசியும் வழங்கினார்கள்.

2.12.23 காலை பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் திருவிடைமருதூரில் நடைபெறவுள்ள பகவத் பாத பாதுகா பிரதிஷ்டா வஜ்ர மஹோத்சவ நிகழச்சியின் பொருட்டு காணொலி காட்சி வாயிலாக அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

4.12.23 கிருத்திகா சோமவார பூஜை ஏகாதச ருத்ர ஜபத்துடன் நடைபெற்றது.

8.12.23 அன்று சர்வேஸ்ர தேவாலய பாலாலயம் பூஜ்யஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

9.12.23 முகாம் அடிலாபாத்துக்கு புறப்பட்டது. அடிலாபாத் செல்லும் வழியில் சந்நியாசி கிருபா இல்லம், ஜம் டவுன், அச்ரசென் பவன், பண்டர்கவ்டா ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்தார்கள்.

அடிலாபாத் திருப்பள்ளி ராமாலயத்தில் முகாம் டிசம்பர் 10ம் தேதி முதல் 12.12.23 வரை நடைபெற்றது.

11.12.23 நான்காவது கிருத்தகா சோமவார விசேஷ அபிஷேக பூஜை அர்க்ய பிரதானத்துடன் நடைபெற்றது. பூஜை காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 6.00 மணிக்கு முடிவுற்றது.

இந்த வருடத்தில் விஜய யாத்திரையுடன் இணைந்து நான்கு கிருத்திகை சோமவார பூஜைகள் நான்கு மாநிலங்களில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் நடத்தப்பட்டன. முதலில் உத்திரபிரதேச பிரயாக்ராஜ், இரண்டாவதாக மத்தியபிரதேஷ் ஜபல்பூர், மூன்றாவதாக மஹாராஷ்ட்ரா நாக்பூர், கடைசியாக தெலுங்கானாவில் அடிலாபாத் என்னும் இடத்திலும் நடைபெற்றன.

அடிலாபாத் முகாம் இடத்தில் ராமர் கோவிலில் சுவாகத சபாவில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் உரையாற்றினார்கள். மேலும் அடிலாபாத்தில் வேதபாடசாலை ஒன்று கிருத்திகா சோமவாரத்தல் வேத கல்விக்குகந்த அனுராதா நக்ஷத்திரத்தன்று பிராமண சமாஜத்தினரால் சங்கல்பம் செய்து கொண்டதை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வெகுவாக பாராட்டினார்கள்.

12.12.23 அன்று மூன்று கால பூஜைகள் முடித்த பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ராம ரதத்தை கொடியசைத்து துவக்க வைத்து குழுமியிருந்த பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் வழங்கியருளி நிஜாமாபாத்துக்கு புறப்பட்டு இரவு 9.00 மணியளவில் தத்தாபீடம் ஸ்ரீ உத்தர திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமி திருக்கோவிலுக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு ஆஸ்ரம நிர்வாகத்தார்

மற்றும் பக்தர்கள் வரவேற்பளித்தார்கள். பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி மற்றுள்ள சந்நதிகளை தரிசனம் செய்து கொண்டு முகாம் இடத்திற்கு எழுந்தருளினார்கள். திருக்கோவில் கலையம்சத்தோடு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

13.12.23 அன்று பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் அளித்தருளிய பின்னர் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜையை முடித்து மாலை 4.00 மணிக்கு தெலுங்கானா மஹாராஷ்டிரா எல்லைப்பகுதியில் உள்ள பசாரா என்னும் நகரத்திற்கு விஜயம் செய்தார்கள். இவ்வழகிய நகரில் ஞான சரஸ்வதி திருக்கோவில் ஒன்றும் உள்ளது. கடந்த 2002-2003 ல் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் மற்றும் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளும் விஜயம் செய்து இத்திருக்கோவிலுக்கு கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் சுவாமி சந்நிதானத்தில் அர்ச்சனைகள் மற்றும் ஹாரத்தி வழங்கினார்கள். பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அறிவாற்றல் மற்றும் நல்ல பேச்சு குறித்த முக்கியத்துவத்தை பற்றி அருளுரையாற்றினார்கள். மேலும் சரஸ்வதி தேவியின் தேவாலயங்கள் தென்னிந்தியாவில் உள்ளது குறித்தும் குறிப்பிட்டார்கள். மேலும் சம்பூர்ணானந்தா சமஸ்க்ருத சர்வகலா சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சரஸ்வதி கோவிலை 1980ல் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டதையும் நினைவு கூர்ந்தார்கள். பின்னர் வெளிவட்ட சாலையில் உள்ள பிராமண சத்திரத்தை அனுக்ரஹம் செய்து நிஜாபாத்துக்கு யாத்திரை புறப்பட்டார்கள். வழியில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் உத்திர திருப்பதி கோவிலில் விசேஷ சுவாகத சபாவில் உரையாற்றினார்கள்.

14.12.23 காலை பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளிய பின்னர் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை நடத்தியருளினார்கள். தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கியதுடன் அனுக்ரஹ பாஷணமும் அருளிச் செய்த பின்னர் செகந்தராபாத் புறப்பட்டார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் செதந்தராபாத் பத்மராவ் பகுதியில் சங்கரமடம் சுப்ரமண்ய சுவாமி தேவாலயத்தில் முகாமிட்டு தனுர்மாத பூஜை மேற்கொள்கிறார்கள்.

18.12.23 அன்று தென்னிந்தியாவில் அனுசரிக்கப்படும் கார்த்திகை மாத சஷ்டி தெலுங்கானா மற்றும் ஆந்திரபிரதேசத்தில் சுப்பராய சஷ்டியாக அனுசரிக்கப்படுகிறது. இன்று ஏகாதச ருத்ராபிஷேகமும், சகஸ்ரநாம அர்ச்சனையும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றன.

# சாணக்ய ஸுபாஷிதம்

**நடக்காதது**

**நிஸ்ப்ருஹோ ந அதிகாரீ ஸ்யாத் அகாமீ மண்டனப்ப்ரிய:**

**நாபி தக்த: ப்ரியம் ப்ரூயாத் ஸ்பஷ்ட வக்தா ந வஞ்சக: ॥**

*ஆசையில்லாத அதிகாரி, ஆபரணபூணுவதில் ஆசை காட்டாத காமம் இல்லாதவன் அடித்தாலும் ப்ரிய வாக் சொல்லாதவன் வஞ்சகமில்லாத வாசலன் இருப்பது என்பது நடக்காது.*

**கற்பித்தல்**

**வினயம் ராஜபுத்ரேப்ய பண்டிதேப்யோ ஸுபாஷிதம்**

**அன்ருதம் த்யூத காரேப்ய: ஸ்த்ர்ரெப்ய; சிக்ஷேத கைதவம் ॥**

*அரசகுமாரர்களுக்கு வினயத்தையும், பண்டிதர்களுக்கு சுபாஷிதத்தையும், சூதாடுபவர்களுக்கு பொய்யையும், பாசாங்கை பெண்களுக்கும் சொல்லவும்.*

**இதைவிட அது மேல்**

**வரம் ந ராஜ்யம் ந குராஜ ராஜ்யம் வரம் ந மித்ரம் ந குமித்ரமித்ரம்**

**வரம் ந சிஷ்யோ ந குசிஷ்யசிஷ்யோ வரம் ந தாரா ந குதாரதாரா: ॥**

*குராஜ்யத்தைவிட ராஜ்யம் இல்லாதிருத்தல், கெட்ட நட்பைவிட நண்பன் இல்லாமலிருத்தல், கெட்ட சிஷ்யனை விட சிஷ்யனில்லாமலிருத்தல், கெட்ட மனைவியை விட மனைவி இல்லாதிருத்தல் சிறந்தது.*

**விட்டு விடு**

**த்யஜேத் தர்மம் த்யா ஹானம் வித்யா ஹீனம் குரும் த்யஜேத்**

**த்யஜேத் க்ரோதமுகீம் பார்யாம் நிஸ்ஸ்னேஹபாந்தவான் த்யஜேத் ॥**

*தயையைச் சொல்லாத மதத்தையும், கல்வி இல்லாத குருவையும், சிடுசிடுப்பான மனைவியையும், அன்பே இல்லாத பந்துக்களையும் விடுவிடு.*

**மனதில் இருப்பவன்**

**தூரஸ்தோபி ந தூரஸ்ததோ யோ யஸ்ய மனஸி ஸ்தித:**

**யோ யஸ்ய ஹ்ருதயே நாஸ்தி ஸமீபஸ்தோபி தூரக: ॥**

*மனத்தில் இருப்பவன் தூரத்தில் இருந்தாலும் அது தொலைவு ஆகாது. மனத்தில் இல்லாதவன் அருகில் இருந்தாலும் தொலைவில் இருப்பவன் தான்.*

**கூட்டு வாழ்க்கை**

**ஏகவ்ருக்ஷ ஸமாரூடா நானாவர்ண விஹங்கமா:**

**ப்ரபாதே திக்ஷு தஸஸு யந்தி கா தவ வேதனா ॥**

*ஒரே வ்ருக்ஷம் பறவைகள் பல விதம் நிறங்கள் பல விதம். இரவெல்லாம் கூடியிருக்கும். காலை வர பல திசைகளில் பறந்து திரியும். இதில் உனக்கு என்ன கவலை?*

**அது வரையில்**

**தாவன் மௌனேன நீயந்தே கோகிலைச்சைவ வாஸரா:**

**யாவத் ஸர்வஜன ஆனந்தாயினீ வாக் ப்ரவர்த்ததே ॥**

*மௌனமாகவே குயில் காலங்களைக் கழிக்கும். வசந்தம் வர அதன் ஆனந்தமான ப்ரவஹிக்கும். (சமயம் வரும் போது தன் வீர்யத்தைக் காட்ட வேண்டும் என்பது தாத்பர்யம்)*

**இவன் விப்ரன்**

**அக்ருஷ்ட பல மூலானி வன வாஸரதி: ஸதா**

**குருதே அஹரஹ: ஸ்ராத்தம் ரிஷிர் விப்ர ஸ உச்யதே ॥**

*பழங்களையும், கிழங்குகளையும், தின்றும், வன வாஸத்திலேயே இருந்தும் தினமும் ஸ்ராத்தம் செய்து கொண்டு இருப்பவன் தான் விப்ரன்.*

**விப்ர வைஸ்யன்**

**லௌகிகே கர்மணி ரத: பஸூனாம் பரிபாலக:**

**வாணிஜ்ய க்ருஷி கர்தா ய: ஸ விப்ரோ வைஸ்ய உச்யதே ॥**

*ஆசைபிடித்தவனை பணத்தினாலும், முரடனை அஞ்சலியினாலும், மூர்க்கனை புகழ்ச்சியினாலும், பண்டிதனை யதார்த்தினாலும் வசப்படுத்துக.*

*(தொடரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

த்யாகராஜன் தஞ்சாவூர்



மகான்கள் தடுத்தாட் கொள்வதிலும், அனுக்ரஹம் செய்வதிலும் நிகரற்று விளங்குவர். நம் பெரியவா அப்படிப்பட்டவர். அவருடைய கடாக்ஷம் நம் மீது விழுந்தாலே போறும். நம்மை உயர்த்தி விடும்.

நான் பெரியவாளிடம் கைங்கர்யம் செய்ய வந்த போது அவர் என்னிடம் காட்டிய அன்பை மறக்கலாகாது. என்னைப் படிக்கச் சொல்லியும் டிக்டேஷன் போட்டும், மனக்கணக்குகள் செய்ய வைத்தும் பரீக்ஷை செய்தார். பின்பு உக்ராண பொறுப்பை எனக்குக் கொடுத்தார். அன்னாளில் ஆயிரத்துக்கும் மேல் வரும் மக்கள் தீர்த்தப் ப்ரஸாதப் பெற்றபின் போஜனத்துக்கு வருவது வழக்கம். அவர்களது பசியாற்றுவது என் கடமை.

ஒரு நாள் எதிர்பார்த்ததுக்கு மேல் மக்கள் வந்துவிட்டனர். ஸந்தர்ப்பணை நடக்கும் போது ஸாதம் குறைந்து விட்டது. என்ன செய்வது என்று தெரியவில்லை. அரிசி மூட்டை வருவதற்கு தாமதம் ஆகும். அது ஸமயம் பெரியவா போஜனைப் பந்தி வழியாக நடந்து வந்து சமையற் கட்டைப் பார்வையிட்டார்கள்.

சாதம் உள்ள இடத்திப் பார்த்து ‘அன்ன லக்ஷ்மியை வணங்கி விட்டு சாதம் பரிமாறுங்கள்’ என்று உத்தரவிட்டார்கள். சாதம் பந்திக்கு வந்து கொண்டேயிருந்தது. எடுக்க எடுக்க தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. பந்தியும் தொடர்ந்து வந்தது. அவருடைய மகிமை எண்ணி வியந்தேன்.

ஒரு சமயம் வத்தலகுண்டு என்னும் ஊரிலிருந்து ஒரு பக்தர் தன் குடும்ப ஸஹிதம் வந்திருந்தார். பெரியவாளை அணுகி தன் குறையைச் சொல்லி அனுக்ரஹம் பெற வந்திருந்தார். கூட்டம் அதிகமாக இருந்ததால் சந்திக்க முடியவில்லை. தூர இருந்தே பார்த்துவிட்டு நமஸ்காரம் செய்து வந்தார். இரண்டு நாள் ஸந்தர்ப்பணைக்கு வந்து போஜனம் செய்து வந்தார். அங்கேயிருந்த சிப்பந்தி இனி நீங்கள் வரக்கூடாது என்று கடிந்து கொள்ளவே மனம் நொந்து போனர். தானும் தன் குடும்பத்தாரும் காசு கொடுத்து சாப்பிட்டு வந்தார். தினமும் வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் பெரியவா அவரைக் கூப்பிட்டு வத்தலகுண்டு தானே என்று வினவினார். அவ்வளவுதான் நெருங்கி வந்து தனக்கு இரு பிள்ளைகள் இருப்பதாயும் அவர்களுக்கு உபநயனம் செய்ய வேண்டும் பெரியவா அனுக்ரஹம் செய்ய வேண்டும் என்று கூற பெரியவாளும் அனுக்ரஹ ப்ராசதம் கொடுத்தபின் என்னைப்பார்த்து ‘இவர் கடந்த நாலு நாட்களாக சாப்பாட்டிற்கு ஸ்ரமப்பட்டிருக்கிறார். நாம் வெளியூருக்குச் சென்றால் நம்மை மற்றவர்கள் உபசரிப்பதுபோல் என் தர்சனம் வேண்டி வருபவர்களை சாப்பிட வரக்கூடாது என்று எப்படி கூறலாம்?’ என்று கூற நான் புரியாமல் விழித்தேன்.

பின்பு அவர்களுக்கு மடி சமையல் செய்து உபசரித்தேன். வழி செலவுக்குப் பணமும் தந்து அவர்களை ஊருக்கு அனுப்பி வைத்தேன். பின்பு சிப்பந்திகளைக் கூப்பிட்டு ‘ நீ எந்த ஊர் ஏன் தினமும் சாப்பிட வருகிறாய்’ என்று கேட்கக் கூடாது என்றும் கட்டளையிட்டேன். நல் வழி காட்டுபவர் பெரியவா.

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

॥ ஓம் ஸ்வானந்தாம்ருதத்ருப்தாய வேதாந்தபாஸ்கராய நம: ॥

**யஸ்மாத் ஜீவிதுமிச்சந்தி ப்ராணின: ஸர்வ ஏவ ஹி ।**

**தஸ்மாத் ஆனந்தரூபோऽயமாத்மா வேதாந்தபாஸ்கர: ॥**

எல்லா பிராணிகளும் என்றும் உயிருடன் இருக்க ஆசைப்படுகின்றனர் அல்லவா? ஏன் என்றால் ஆத்மா ஆனந்த சொரூபனாக இருக்கிறான்.

## 21. ஏன் நீண்ட ஆயுளின் மேல் ஆசை?

**கோ ஹ்யேவான்யாத் க: ப்ராண்யாத்! யதேஷ ஆகாச**
**ஆனந்தோ ந ஸ்யாத் ॥**

**தைத்திரீயோபநிஷத் 2-7-3**

*இந்த ஆத்மானந்தம் இல்லாமலிருந்தால் எவன்தான் உயிருடன் இருக்க ஆசைப்படுவான் ? ஆத்மா எப்பொழு தும் ஆனந்த சொரூபனாக இருப்பதால் தான் ஒவ்வொரு பிராணியும், மனிதனும் உயிருடன் இருக்கவே ஆசைப் படுகிறார்கள்.*

ஆத்மா கண்ணுக்குத் தெரியாமல் இருந்தாலும், அது இல்லை என்று சொல்லக் கூடாது. ஏனென்றால் ஆத்மா, மனதுக்கும் ஆத்மனாகி, சூட்சுமமாக இருக்கிறான்.

ஆத்மனுக்காக அல்லவா எல்லா இந்திரியங்களும் தங்கள் வியாபாரங்களைச் செய்கின்றன. உடல் மற்றும் இந்திரியங்கள் தத்தம் வேலைகளைச் செய்வதிலிருந்தே ஆத்மா இருக்கிறது என்பது தெரிகிறது. இந்திரியங்களிலிருந்து உண்டாகக் கூடிய ஆனந்தமும் ஆத்மாவிலிருந்தே உண்டாகிறது. ஆனந்தம் கிடைப்பதற்காகவே யாவரும் முயற்சி செய்கிறார்கள். அதற்காகவே உயிருடன் இருக்கவும் ஆசைப்படுகிறார்கள். ஆத்மா ஆனந்த சொரூபன். ஆத்மாவே பிரம்மம். பிரம்மமே ஆனந்தம். இதையே தன்னுடைய சொரூபம் என்று தெரிந்து கொண்டால், அவன் ஆத்மனை உணர்ந்தவனாகிறான்.

॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

॥ ஓம் ஸர்வசைதந்யரூபாய வேதாந்தபாஸ்கராய நம: ॥

**சுத்தமேவ ஹி சைதன்யம் நானோபாதிப்ரபேதத: ।**

**ஸம்ஜ்ஞானாSSஜ்ஞானவிஜ்ஞானம் பாதி வேதாந்தபாஸ்கர: ॥**

சுத்தமாகிய சைதன்யமே பல உபாதிகளினால் ஸம்ஜ்ஞானம், ஆஜ்ஞானம், விஜ்ஞானம், என பலவாறு தோன்றுகிறது.

## 22. சைதன்னியத்தின் வெளிப்பாடுகள்!

**ஸம்ஜ்ஞானம் ஆஜ்ஞானம் விஜ்ஞானம் ப்ரஜ்ஞானம் மேதா த்ருஷ்டி:**
**த்ருதி: மதி: மனீஷா ஜூதி: ஸ்ம்ருதி: ஸங்கல்ப: க்ரது: அஸு:**
**காமோ வச இதி ந ஸர்வா ண்யேவைதானி ப்ரஜ்ஞானஸ்ய**
**நாமதேயானி பவந்தி ॥**

**ஐதரேயோபநிஷத் 3-1-2**

*ஸம்ஜ்ஞானம், ஆஜ்ஞானம், விஜ்ஞானம், ப்ரஜ்ஞானம் மேதை, த்ருஷ்டி, த்ருதி, மதி, மனீஷா, ஜூதி, ஸ்ம்ருதி, ஸங்கல்பம், க்ரது, அஸு, காமம், வசம் போன்ற இவை யாவும் ஒரே ப்ரஜ்ஞானத்தின் வெவ்வேறு பெயர்கள் ஆகும்.*

ஒரே மின்சாரமே வேறு வேறு மின்சார விளக்குகளில் வேறுவேறாக தெரிவதுபோல் ஒன்றே ஆகிய சைதன்னியம் அந்தகரணத்தின் வேறு வேறு உபாதிகளால் பலவிதமாகத் தெரிகின்றன.

அது எப்படி என்றால், ஸம்ஜ்ஞானம் அறிவு, ஆஜ்ஞானம் = ஆட்சி, விஜ்ஞானம் = விசேஷமான அறிவு, ப்ரஜ்ஞானம் = பகுத்தறிவு, மேதா = கூர்மையான அறிவு, த்ருஷ்டி = மனக்கண் கொண்டு காணுதல், த்ருதி: : மனோதிடம், மதி: = மனன சக்தி, மனீஷா = நிச்சயபுத்தி, ஜூதி: மனக்கலக்கம், ஸ்ம்ருதி: = ஞாபகசக்தி, ஸங்கல்பம் = விருப்பம், க்ரது = தீர்மானம், அஸு = பிராண சக்தி, சக்தி, காமம், ஆசை, வசம் = விஷயங்களின் கவர்ச்சி, இவையெல்லாம் சைதன்யத்தின் வெளிப்பாடுகளேயாகும்.

॥ ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ॥

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

**அனுசாஸன பர்வம்**



*பீஷ்ம உபதேசம் தொடர்கிறது*

*ஆசாரத்திலிருந்துதான் ஆயுள் துராசாரம் செய்பவர்கள் அல்ப ஆயுட்கார்ரகள்.*

*பிறன் மனை சேருதல் தவறு, மற்றொருவரைப் பற்றிப் பேசுதல் தவறு, த்வேஷத்தையும், அபிமானத்தையும், கொடூரத்தையும் தவிர்க்கவும்.*

*வயோதிகன், ஞானி, நண்பன், அனாதையான தமக்கை, குரு நற்குலத்தினன், பண்டிதன் இவர்கள் தரித்ரர்களாயின் தன் சக்திக்குத் தகுந்தவாறு காக்கப் பட வேண்டும்.*

*பொறாமை தீர்க்காயுளைக் கொடுக்காது. அதைத் தவிர்க்கவும். ஸத்வத்தின் துணை கொண்டு ஆழமாயும் சுத்தமாயும் உள்ள மானஸ தீர்த்ததில் நீராட வேண்டும்.*

*தீர்த்த ஸ்னானம் தவம் மென்மை ஸத்யம் நேர்மை அஹிம்சை, தன்னடக்கம், தமம் சமம் இவை நீராடுதலுக்குச் சமம். நடத்தையில் சௌசமாயிருத்தல் பெரும் சௌசம். தீர்த்த சௌசம் இதற்குப் பின்தான். புலால் மறுத்தல் மிகச்சிறந்த வ்ரதம். ஆயுளைக் கொடுக்கும் என்று மகரிஷிகள் கூறுவர்.*

*காமத்தினாலோ, க்ரோதத்தினாலோ, பயத்தினாலோ, தற்கொலை செய்து கொள்பவன் நரகத்திலேயே உழல்வான். சோகத்திற்கு ஆயிரம் வாசல்கள் பயத்திற்கும், ஆயிரம் வாசல்கள் மூடர்கள் அதில் தினமும் வீழ்கிறார்கள்.*

*இந்த்ரனுக்கும் கூட நிரந்தர ஸுகம் கிடையாது.*

எல்லா சேர்த்தவையும் நஷ்டமடையும், உச்சங்கள் நீசமாகும், கட்டிலிருப்பவை பிரியும். ஜீவனம் மரணத்தில் முடியும். தனத்தை சேர்ப்பதில் துக்கம், காப்பதில் துக்கம், செலவில் துக்கம், நாசத்தில் துக்கம்.

எல்லோருக்கும் ஒரே மாதிரியாக நிகழும் ஜனன மரணத்தைக் கண்டு எவன் துவள்வதில்லையோ அவன் கட்டைக்கும் மண் கட்டிக்கும் சமம். நாராயணனைப் பாடி புகழ்ந்து அவன் சேவடியையே நினைந்து உருகுவதே ஒருவன் பெரும் பேறு.

சராசரங்களின் அதிபதியும், ஜகத்பதியுமான நாராயணனின் ஆயிரம் நாமங்களை துதிப்பவனுக்கு எந்த துக்கமுமில்லை. எல்லா தர்மங்களிலும் சிறந்தது நாராயணனின் புகழ் பாடுவதே. புண்யம் செய்து நாரயணனின் பக்தனாக உள்ளவனுக்கு க்ரோதம், மாத்ஸர்யம்,லோபம் கெட்ட மதி இல்லை.

தனித்தனியாக பூதங்களில் தோன்றும் ஒரே விஷ்ணு மூன்று லோகங்களையும் வ்யாபித்து அழியாதவனாய் எல்லாவற்றையும் அனுபவிக்கிறான். ஆயிரம் கைகளாய், ஆயிரம் கால்களாய், ஆயிரம் தலையுடையாய் ஆயிரம் பேர்கொண்டவனாய் சாஸ்வதமானவனே ஆயிரம் கோடி யுகங்களாய் இருப்பவனே உனக்கு நமஸ்காரம்.

யுதிஷ்டிர ! உன் ப்ரஜைகளை நன்கு பாலனம் செய். க்ருஷ்ணனே உனக்கு அடைக்கலம். என்று கூறி பீஷ்மர் மௌனமானார்.

பின்பு வ்யாசர் பீஷ்மரைப் பார்த்து உமது உபதேசங்களை கேட்ட யுதிஷ்டிரனுக்கு விடைகொடு என்று கூற அவரும் யுதிஷ்டிரரைப் பார்த்து கூறினார்.

ராஜன் ! உன்னுடைய ராஜதானிக்குச் செல். தர்மத்தில் உன் மதியை வை. உன்னுடைய மானசீக ஜ்வரம் போய்விடும். நற்கதியை அடைவாய். எப்போது உத்தராயணம் தொடங்குமோ அப்போது நீ இங்கு வரலாம். அவரும் தன் பரிவாரங்களுடன் ஹஸ்தினாபுரம் சென்று ஐம்பது நாள் கழித்து உத்தராயணம் தொடங்க மீண்டும் பீஷ்மரிடம் வந்தார்.

பீஷ்ம பிதாமஹர் முக்தி

யுதிஷ்டிரர் பிதாமகரே ! நீங்கள் கூறியபடி உத்தராயணம் பிறந்துவிட்டது. நான் உங்களைத் தர்சிக்க வந்துள்ளேன். த்ருதராஷ்டிரரும் க்ருஷ்ணரும் வந்துள்ளனர்.

*பீஷ்மர் த்ருதராஷ்டிரா! கவலை கொள்ளாதே. நடந்தது நடந்தவையே. எவ்விடத்தில் தர்மம் உள்ளதோ அவ்விடத்தில் ஜயமுண்டு. பாண்டவர்களுடன் சமாதான போக விரும்பாமல் உன் புத்ரன் துர்யோதனன் தானும் அழிந்து குலத்தையே அழித்தான். அவர்கள் குறித்து வருத்தப்படவேண்டாம்.*

*க்ருஷ்ணரைப் பார்த்து பீஷ்மர் தேவதேவனே வாஸுதேவனே நாராயண ரிஷி என்று உன்னை அறிவேன் இவ்வுடலை விடப்போகிறேன். அனுமதி கொடு. க்ருஷ்ணர். உமக்கு விடை தருகிறேன். வஸுக்களிடம் செல்லுங்கள் நீங்கள் சுத்தாத்மா. உமக்கு எப்பாவமுமில்லை.*

*பீஷ்மர் நான் என் ப்ராணனை விடப்போகிறேன். ஸத்யத்திதான் நீங்கள் அனைவரும் இருக்க வேண்டும் அதுவே பலம். ஸத்யம் பலம். அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அவர் உடலில் இருந்த பாணங்கள் வீழ்ந்தன. எல்லா கேந்த்ரங்களிலும் ப்ராணனை அவர் நிறுத்த அவரது ஆத்மா கபாலத்தை உடைத்து மேலே கிளம்பியது.ஜோதிமயமான அவரது ஆத்மா மேலுகை அடைந்தது. தேவதுந்துபிகள் முழங்கின. பூ மாரி வானம் பொழிந்தது, ஸாதுக்கள் நலம் நலம் என்றனர். இப்படி பீஷ்ம பிதாமஹர் முக்தி அடைந்தார்.*

*( இந்த பீஷ்ம முக்தி உத்தராயணத்தில் ப்ரதீபத்தில் அவர் முக்தி அடைந்த ஸமயத்திலேயே வருவது கடவுள் க்ருபை என்று நினைக்கிறேன்.)*

*அனுசாஸன பர்வம் முற்றும்*

**ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
**வேண்டும் பனுவல் துணிவு**

*ஒழுக்கத்தில் நிலைத்துநின்று பற்றுவிட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்.*

*(குறள் : 21)*

*கர்மத்தாலோ, மக்கட்பேறாலோ, பொருளாலோ, அன்று தியாகத்தால் மட்டுமே சிலர் சாகா நலையை அடைந்திருக்கின்றனர். ஸ்வர்க்கத்திற்கும் மேலானதும் (அறிவாளிகளின் அறிவாகிய) குகையில் வைக்கப்பட்டுப் பிரகாசிப்பதுமான இதை ஞான வாழ்க்கையில் முயல்வோர் அடைகின்றனர்.*

*(மஹாநாராயண உபநிஷத் : 12-3)*

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீ நிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாரயணம் செய்வோம்.

**कारणपरचिद्रूपा कान्जीपुरसीम्नि कामपीटगता**
**काचन विहरति करुणा काश्मीरस्तभक कोमलान्गलता ।। १ ।।**

***காரணபர சித்ரூபா காஞ்சீபுர ஸேஎம்னி காமபீடகதா***
***காசன விஹரதி கருணா காஸ்மீரஸ்தபக கோமலாங்க லதா ।। 1 ।।***

சர்வ காரணங்களுக்கும் அதீதமான சித்ரூபமானதும், குங்குமப்பூ கொடிபோல் மிருதுவாயிருக்கும் மேனியை உடையதும், ஏதோ ஒரு கருணை வடிவம் காஞ்சீபுர ப்ரதேசத்தில் காமபீடத்தில் விளங்கி கொண்டு திருவிளையாடல் புரிகிறது.

**कन्जन कान्जी निलयमब करहृतकोदण्दबाणस्रुणिपाशम**
**कटिनस्तनबर नम्रम्  कैवयानन्दकन्दमवलम्बे ।। २ ।।**

***கஞ்சன காஞ்சீ நிலயம் கரத்ருத கோதண்ட பாண ஸ்ருணிபாசம்***
***கடினஸ்தபர நம்ரம் கைவல்யானந்த கந்தம் அவலம்பே ।। 2 ।।***

காஞ்சீபுரத்தை இருப்பிடமாக்கிக் கொண்டு தனது திருக்கையில் வில், அம்பு அங்குசத்தையும் தரித்து கடினமான ஸ்தன பாரத்தால் சாய்ந்த திருமேனியுடன் மோக்ஷமென்னும் ஆனந்ததிற்கு மூலமாய் நிற்கும் எண்ணுதற்கரிய பொருளை பற்றிக் கொள்ளுகிறேன்.

कुण्डलि कुमारि कुटिले चण्डि चराचरसवित्रि चामुण्डे
गुणिनि गुहारिणि गुह्ये गुरुमूर्ते त्वाम् नमामि कामाक्षि ।। ३ ।।

***குண்டலி குமாரி குடிலே சண்டி சராசர ஸவித்ரீ சாமுண்டே***
***குணினி குஹாரிணி குஹ்யே குருமூர்த்தே த்வாம் நமாமி ।। 3 ।।***

காமாக்ஷியே! குண்டலம் தரித்த பாலா பரமேஸ்வரியாயும், குடிலை என்னும் குண்டலினீ ஸ்வரூபமாயும் மகாலக்ஷ்மீ, ஸரஸ்வதிமாக காளி ஸமஷ்டி வடிவமான சண்டிகா பரமேஸ்வரியாயும் த்ரி குணங்களின் வடிவமாயும் மாயா ஸ்வரூபமாயும், அஞ்ஞானத்தைப் போக்கும் ஏகாந்த குரு மூர்த்தியாயும் இதய குகையில் சீலையாவும் விளங்கும் உன்னை வணங்குகிறேன்.

अभिदाकृतिर्भिदाकृतिरचिताकृतिरपि चिदाकृतिर्मात:
अनहन्ता त्वमहन्ता भ्रमयसि कामाक्षि शास्वती विश्वम् ।। ४ ।।

***அபிதாக்ருதிர் பிதாக்ருதிரசிதாக்ருதிரபி சிதாக்ருதிர் மாத***
***அனஹந்தா த்வமஹந்தா ப்ரமயஸி காமாக்ஷீ சாஸ்வதீ விஸ்வம் நச ।। 4 ।।***

ஹே! ஜகன்மாதா ! அழிவற்ற நிர்விகார ஸ்வரூபிணியாய் விளங்கும் நீ பேதமற்ற அகண்ட வடிவாகவும், நானாரூப பேத வடிவாகவும் சித்ரூபிணியாகவும் ஜட வடிவமாகவும் அபரிச்சின்ன பராஸித்த ஸ்வரூபிணியாகவுமஹங்கார வடிவாகவும் விளங்கி உலகை மயக்குகிறாய்.

अन्तरपि बहिरपि त्वम् जन्तुततेरन्त कान्तकृतहन्ते
चिन्तित सन्तानवताम् सन्ततमपि तन्तनीषि महिमानम् ।। ५ ।।

***அந்தரபி பஹிரபி த்வம் ஜந்துததேரந்த காந்தக்ருதஹந்தே***
***சிந்தித ஸந்தானவதாம் ஸந்ததமபி தந்தனீஷி மஹிமானம் ।। 5 ।।***

ஹே தேவி ! ஜீவ ஸமூஹத்தின் உள்ளும் வெளியும் வ்யாபித்துள்ள நீ இடைவிடாமல் அவிச்சின்னமாய் சிந்திக்கும் மனன சீலர்களுக்கு எப்போதும் மிகச்சிறந்த மஹிமையாகும் ஆத்ம ஞானத்தை ஸமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றனை.